# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

ஜூன் 2009 ஜீவியம் 15 மலர் 2

*இம்மாத மலரில்....*

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| லைப் டிவைன் | 2 |
| இம்மாதச் செய்தி | 35 |
| அன்பர் கடிதம் | 36 |
| அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு | 37 |
| சாவித்ரி | 44 |
| நேரம் வந்துவிட்டது | 46 |
| தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் | 49 |
| பூரண யோகம் - முதல் வாயில்கள் | 50 |
| மனிதனும் மிருகமும் | 53 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

**உரியது மட்டுமே உனக்கு உண்டானது. எவருக்கும் நஷ்டமில்லையென்றாலும் உரியதல்லாதது உதவாது.**

**உள்ளனவெல்லாம் உவந்து அளிப்பவனுக்கு சரணாகதி பலிக்கும்.**

**அருள் புரியும்பொழுது தோல்வி வெற்றியாகும். தோல்வியை வெற்றியாக மாற்றுவது அருளை அறிவது.**

**அவசரம், பெருமை இரண்டும் அறியாமையைவிட அதிகக் கெடுதல் செய்யும்.**

# லைப் டிவைன்

கர்மயோகி

## 18. மனமும் சத்தியஜீவியமும்

உலகில் தத்துவ ஞானிகளோ, விஞ்ஞானிகளோ மனம்என்றால் என்னஎன்று கூறவில்லை. அதை அறிவது இன்றில்லாத ஞானத்தைப் பெறுவதாகும். யானையைப் பார்த்த குருடன் அதன் உடலைத் தடவி, ''யானை சுவர் போன்றது'' என்றான். ஏனெனில் அவனால் முழு யானையைக் காண முடியவில்லை, பார்வையில்லை. பார்வையிருந்தும் ஒரு பொருளின் முழுஅம்சத்தைக் காண இயலாமல், ஓர் அம்சத்தை மட்டும் காணும் கருவி மனம். தாயாருக்குத் தன் குழந்தையின் அறியாமை தெரிவதில்லை. அவள் மனம் குழந்தையைப் பார்க்கிறது. அது மக்குஎன்பது அனைவருக்கும் தெரிந்தாலும், அவளுக்குத் தெரிவதில்லை. மனம் குழந்தையை அதன் அறியாமையிலிருந்து பிரித்துக் கொடுக்கிறது. இத்திறன் மனத்திற்கு மட்டுமேயுண்டு. மனிதன் மனத்தாலானவன். அவன் தினமும் அனுபவிப்பது இது. கடைக்குப் போனால் சிலர் அங்குள்ள அனைத்தையும் காண்பர். மற்றவருக்கு, தங்களுக்கு வேண்டிய பொருள்கள் மட்டும் தெரியும். நாம் முக்கியமாக வீடு வாங்கப் பேரம் பேசும்பொழுது மனம் பேரத்தில் இருக்கிறது, மற்றதைக் கவனிப்பதில்லை. பேரம் முடிந்தபிறகு பார்த்தால், எதிரில் வீடு விற்பவருடன் நம் நண்பர் உட்கார்ந்து இருக்கிறார். பேரம் முடியும்வரை அவர், கண்ணில் படுவதில்லை. மனம் பேரத்திலிருக்கிறது. இது மனத்திற்கேயுள்ள திறன். ஒரு பகுதியை



முழுமையாகக் காணும் இத்திறன், முழுமையைக் காண முடியாமற் செய்கிறது.

- ✡ **மனம் முழுமையைக் காணும் திறனற்றது.**
- ✡ **மனம் பகுதியை முழுமையிலிருந்து பிரித்துக் காணும்.**
- ✡ **முழுமையிலிருந்து பிரித்த பகுதியையே முழுமையெனக் கொள்வது மனம்.**

நாம் ஒரு கம்பனியில் வேலை செய்தால், நம் சௌகரியங்கள் மட்டும் தெரிகிறது. கம்பனியின் சௌகரியம் - இலாபம் - நமக்குத் தெரிவதில்லை. கம்பனிக்கு இலாபம் வாராவிட்டால், நமக்கு வேலை இல்லை. இருப்பினும் மனம் தன்னையே முழுமையாகக் கொள்கிறது. முழுமையான கம்பனியைக் காண அதனால் முடியவில்லை.

- ✡ சத்து, சித்து, ஆனந்தமுள்ள சச்சிதானந்தத்தில் ஆனந்தத்தைமட்டும் கண்ட ரிஷிகள், ''அதுவே சச்சிதானந்தம்'' என்றனர். இது மனம் செயல்படும் வகை.
- ✡ அரசியல்வாதிக்கு எலக்ஷன் தெரியும், தொகுதி தெரியாது.
- ✡ பரிசு பெறுபவருக்குப் பரிசுப்பொருள் தெரியும், அதைக் கொடுக்கும் அன்பு தெரிவதில்லை.
- ✡ பிள்ளை அதிகமாகச் சம்பாதித்தால், அதிக வருமானம் தெரியும், பிள்ளை கண்ணில் படுவதில்லை.
- ✡ எலக்ஷனில் ஜாதி தெரிகிறது, நாடு தெரிவதில்லை.

மனம் பகுக்கும் கருவி. தொடர்ந்து துண்டு செய்யும். இனித் துண்டு செய்ய முடியாதென்றால், துண்டு செய்ததை ஒன்று சேர்க்கும். மனத்திற்கு முழுப்பார்வையில்லை. இதுவரை மனிதனுக்கு முழுப் பார்வை உற்பத்தியாகவில்லை. முழுப்பார்வையுள்ளது சத்தியஜீவியம். மனிதன் தெய்வம்என்பது மனிதனுடைய முழுமை. மனிதன் நம்மைப் போன்றவன்என்பது பகுதியான பார்வை. பகவான் ஸ்ரீ அரவிந்தருக்கு முழுப்பார்வை - சத்தியஜீவியப்பார்வை - அலிப்பூர் ஜெயிலில் வந்த பொழுது மனிதன் நாராயணனாகத் தெரிந்தான். முழுப்பார்வைக்கு உலகில் உள்ள எல்லாப் பொருள்களும் பிரம்மமாக - ஸ்ரீ அரவிந்தராகத்

- தெரியும். அதுவே சத்தியஜீவியம் பெற்றதற்கு அடையாளம். உடல் குருடு. உணர்ச்சிக்குக் கண் தெரியும், காது கேட்கும். மனம் உணர்வால் - புலனால் - உலகை அறிகிறது. அதுவே நமக்குள்ள பெரிய கருவி. சத்தியஜீவியம் இனி உலகுக்கு வரப்போகும் கருவி.

✡ **மனம் தீமையை அறியும்.**

✡ **முழுப்பார்வைக்குத் தீமை உலகிலில்லை.**

பிரம்மம் அகம், புறமாகப் பிரிய முடிவு செய்ததால் சிருஷ்டி ஏற்பட்டது. சத்தியஜீவியம் அகம், புறமாகப் பிரிந்ததால், அகம் கடவுளாகவும், புறம் உலகமாகவுமாயிற்று. மனம் இவற்றிடையே உற்பத்தியானது. பிரிவினையால் உற்பத்தியான மனம் பிரிவினைக்குரிய கருவியாயிற்று. பிரிவினைக்கான கருவி பொருள்கள் அணுவாகும் வரைப் பிரிவினையைத் தொடர்ந்தது. மனம் பெற்ற ஞானமும் உறுதியும் பிரிந்ததால் வாழ்வு உற்பத்தியாயிற்று. ஞானம் உறுதியுள் மறைந்ததால் ஜடம் ஏற்பட்டது.

வேதகாலம்முதல் மனிதன் நாடுவது தெய்வீக வாழ்வு. அது சத்தியமான வாழ்வு. இன்று அது முடியுமாஎன நாம் ஐயுறுகிறோம். ஐயம் எழக் காரணம் மேலுலகுக்கும் நமக்கும் எந்த உறவுமிருப்பதாகத் தெரியவில்லை. முன் அத்தியாயங்களில் அத்தொடர்புகளை பகவான் சுட்டிக்காட்டியுள்ளார். பின்வரும் அத்தியாயங்களில் அவற்றை விளக்குகிறார். அவை விளங்கினால், அறியாமை ஏற்பட்ட வகை புரிந்தால் இந்த ஐயம் அகலும். அப்படி விளங்க வேண்டியவை,

✡ **சத்து, சித்து, ஆனந்தம், சத்தியஜீவியம் சிருஷ்டியில் தலைகீழாகி அஞ்ஞானத்துள் மனம், உயிர், சைத்தியப்புருஷன், உடலாகின.**

✡ **அஞ்ஞானம் சிருஷ்டியின் சிகரம். அதுவே ஆனந்தத்தைப் பேரானந்தம் ஆக்குகிறது.**

✡ **மனம் சிருஷ்டிக்கு உபகருவி.**

✡ **அது அஞ்ஞானத்தை உற்பத்தி செய்து, அஞ்ஞானமாகவே ஆகிறது.**

✡ **மனம் அஞ்ஞானத்தை விட்டு வெளியேறுவது பரிணாமம்.**



✡ **தன்னை மறப்பது அஞ்ஞானம். மறந்தவன், மறைவது பூரண அஞ்ஞானம்.**

மேற்கூறியவை அத்தியாயத்திற்கு முக்கியக் கருத்துகள். இனி நூலை வரிசைக்கிரமமாகப் பார்க்கலாம்.

**பக்கம் 158 / பாரா 1**

தெய்வீக ஆன்மா சத்தியஜீவிய வாழ்வின் சாரத்தைப் பெற்று, சச்சிதானந்தத்திலுறைகிறது. அதை நாம் தெளிவாக அறிய முயன்றோம். ஜீவாத்மா இவ்வுடலில் அவ்வுயர்ந்த வாழ்வை வெளிப்படுத்த வேண்டும். நம் வாழ்வு உடலால் வாழப்பட்டு, மனத்தால் ஆளப்படுகிறது. நாம் சத்தியஜீவிய வாழ்வையறிந்தவரை நமக்கும் அதற்கும் எந்தத் தொடர்புமிருப்பதாகத் தெரியவில்லை. மனித வாழ்வு மனம், உடல்என்ற இரு அம்சங்களிடையேயிருந்து வாழப்படுவது. சத்தியஜீவிய வாழ்வு ஜீவிய நிலையாகவும், ஜீவனுடைய நிலையாகவும் காணப்படுகிறது. உடலில்லாத ஆத்மாக்கள் கொள்ளும் தொடர்பாகவும், தொடர்பின் ஆனந்தமாகவும் அது காணப்படுகிறது. ஆத்மாக்கள் பிரிந்து, உடல் பிரியாத உலக வாழ்வு அது. அது அனந்தமான சந்தோஷமுடையது; சிறைப்பட்ட உருவம் அனுபவிக்கும் சிதறிய சந்தோஷமன்று. உடலுக்குள் சிறைப்பட்ட ஆத்மாவுக்கு அவ்வாழ்வு அமையுமாஎன்ற ஐயம் எழுவது இயற்கை. நம் வாழ்வின் மனம் ரூபத்தால் சிறைப்பட்டுள்ளது. சக்தி ரூபத்தால் சுருக்கப்பட்டு உள்ளது.

***1) தெய்வீக ஆன்மாவின் சத்தியஜீவிய வாழ்வின் சாரம்.***

தெய்வீக ஆன்மா, சத்தியஜீவியம், தெய்வீக வாழ்வு ஆகியவற்றை மரபு ஓரளவு அறியுமென்றாலும், அவர்கள் அவற்றை முக்கியமாகக் கருதி விளக்கவில்லை. பகவான் ஸ்ரீ அரவிந்தர் உலகுக்களித்த வரங்களில் இது முதன்மையானது. இதை நமக்கு எடுத்துரைக்கும்பொழுது அவர் உலகம் சிருஷ்டிக்கப்பட்ட வழியை process of creation கூறுகிறார். பாடகர் பாடுவதைக் கேட்கலாம்,

கேட்டு ரசிக்கலாம், அப்பாட்டை எழுதிக் கொள்ளலாம், நாமும் பாடலாம். ஆனால் அவர் போலப் பாடுவது எளிதன்று. அதுபோல பகவான் கூறும் இரகஸ்யம் எழுத்திலிருக்கிறது. படிக்கலாம், புரிவது போலத் தோன்றும், ஆனால் முக்கிய அம்சங்கள் விட்டுப்போகும். அந்த இரகஸ்யம் புரிந்தால், வாழ்வில் தோல்வியிருக்காது. உடலும் புரிந்து கொண்டால், மரணம் அழியும். அதை முன் அத்தியாயங்களில் கூறுகிறார். அதன் சுருக்கம்,

*அனந்தமான ஜீவன் அளவில்லாத சக்தியுடன் அபரிமிதமான*
*ஆனந்தத்தை ஆத்மா ரூபத்தில் தன்னிலும், பிறரிலும்,*
*கடவுளுடனும் அனுபவிக்கப் பிரபஞ்சம் முழுவதும்*
*ஜீவாத்மாக்களாகப் பரவியுள்ளான்.*

**இது உண்மையானால், இது பூவுலகில் சாத்தியமானால்,**

1) **தீமை, மரணம், நோய், தோல்வியிருக்கா.**
2) **நம்மையும், பிறரையும், பிரபஞ்சத்தையும் நாம் முழுவதும் அறிவோம்.**
3) **உலகில் அஞ்ஞானம் அழியும்.**
4) **பிரம்மம் காலத்துள் காலத்தைக் கடந்து ஜனித்து, பரிணாமத்தைப் பூர்த்திசெய்து, மீண்டும் தன் ஆதியையடையும்.**

இப்படிப்பட்ட உயர்ந்த வாழ்வுக்கும் இன்று நாமறிந்த வாழ்வுக்கும் எந்தத் தொடர்புமில்லை. நமக்கு நம்மையே தெரியாது. பிறரையும் தெரியாது. எதிர்காலம் புரியாது. தோல்வி நிரம்பியது நம் வாழ்வு. மரணம் நமது பிறப்புரிமை. நாம் ஒரு விஷயத்தை அடைய வேண்டுமானால், நாம் அதனுள் இருக்க வேண்டும். M.P.ஆக ஒருவர் விருப்பப்பட்டால், அவர் அரசியலில் தொண்டராகவாவது இருக்க வேண்டும், இல்லாமல் எப்படி முடியும்? தெய்வீக வாழ்வின் அரங்கிலேயே (field) நாமில்லை. அடுத்த பாராவில் நாம் தெய்வீக வாழ்வின் அரங்கில் உள்ளோம். ஆனால், அதை நாமறியோம்எனக் கூறுகிறார்.



**பக்கம் 159 / பாரா 2**

***அனந்தஜீவன் சச்சிதானந்தம். உலகம் அவனால் சிருஷ்டிக்கப்பட்டது. மனம் அதன் குதர்க்கமான கோணல் ரூபம்.***

சுதந்திர இயக்கம் இந்தியாவுக்கு ஆயுதம் தாங்கிய போராட்டமில்லாமல் விடுதலையளித்தது. அதன் குதர்க்கமான கோணல் விளைவு ஊழல். எப்படி அப்படிப்பட்ட உன்னத இயக்கத்தின் பலன் ஊழலாகும்என்பது கேள்வி. பதிலெதுவானாலும் ஊழல் இலஞ்சம் உண்மை. அறிவு குறைவான நிலையில் திறமை அதிகமானால், பலன் சிறுபிள்ளை கையில் துப்பாக்கியைக் கொடுத்ததுபோல் விபரீதமாகும். சச்சிதானந்தம் அனந்தஜீவன், அவன் ஆனந்தமயம் ஆனவன். நம் உலகம் அறியாமையால் ஆளப்படுகிறது. உன்னதமான சச்சிதானந்தம் அறியாமை ஆளும் இடத்தில் குதர்க்கமாகிறது.

***தெய்வீக மாயையை நாம் முன்அத்தியாயங்களில் விளக்கினோம். சத்தியம்-ஜீவியம், முழுஎண்ணம் இவற்றின் மூலம் சித்-சக்தி, பிரபஞ்ச வாழ்வு செயல்படுகிறது. உலகை சிருஷ்டித்து, நிர்வாகம் செய்கிறது. ஆனால் மேலேயுள்ள நான்குடன் - சத், சித், ஆனந்தம், சத்தியஜீவியம் - கீழேயுள்ள மூன்று - மனம், உயிர், உடல் - எப்படித் தொடர்புள்ளது என நாம் அறியோம்.***

மத்திய சர்க்கார், மாநில சர்க்கார்போன்றவை மேலேயும், ஓட்டுப் போடும் மனிதன் கீழேயும் உள்ளான். மனிதனுக்கு, தனக்கும் சர்க்காருக்கும் உள்ள தொடர்பு தெரியாது. ஓட்டுப் போடுவது தெரியும். மந்திரி, MP, MLA ஆகியவர் செல்வாக்குள்ளவர் எனத் தெரியும். தான் ஓட்டுப் போடுவதால் அவர்கள் பதவியிலுள்ளனர்எனவும் தெரியும். ஆனால் தானும் அந்நிலையை அடைய முடியும்என அவனுக்குத் தெரியாது. கிராமத்து ஓட்டுக்குப் படிப்பும் அனுபவமும் வந்தால் அது புரியும். அது புரிந்தால் அவன் MP ஆவதில்லை. கிராமத்து விவசாயி வசதியுள்ள நகரத்துக் குடிமகனாவான். முயன்றால் அவர்கள் வகிக்கும் பதவிகள் அவனுக்கும் உண்டு.

*அஞ்ஞான மாயையை நாமறியோம். அதுவே நம் வேதனைக்கு எல்லாம் வேர். எப்படி இறைவனிலிருந்து அது வெளிவருகிறது, தெய்வீக மாயையிலிருந்து எப்படி அஞ்ஞான மாயை உற்பத்தி ஆயிற்றுஎன நாம் அறியோம். தெய்வீக மாயை நம் உலகை சிருஷ்டித்தது. அதுவே மேல் லோகத்தையும் சிருஷ்டித்தது. அந்த சிருஷ்டியில் இவ்விரண்டு லோகங்கட்கும் தொடர்பு இருந்திருக்க வேண்டும். அதை நாமறியும் வரை இப்புதிருக்கு விடை கிடைக்காது.*

கோர்ட்டில் கேஸ் கொடுக்க வக்கீலிடம் போகும் கட்சிக்காரன் தனக்குச் சாதகமான விஷயங்களைக் கூறுவான், பாதகமான விஷயங்களை மறைத்துவிடுவான். அதைக் கோர்ட்டில் எதிரி வக்கீல் எழுப்புவார். அதையும் சொல்லும்வரை வக்கீலுக்குக் கேஸ் பிடிபடாது. வக்கீல் எடுக்கும் கேஸில் நியாயமிருந்தாலும், நடந்தவைகளை, சிக்கல் எழும்பிய வகையைக் கட்சிக்காரர் வக்கீலிடம் கூறாவிட்டால், நியாயமிருந்தபொழுதிலும் ஏதாவது ஒரு law pointஇல் கேஸ் தோற்றுப்போகும்.

- ❀ நியாயமான கேஸ் தோற்காது.
- ❀ வழக்கு உருவான வழிகளை முழுவதும் ஒளிவு மறைவு இல்லாமல் கூறினால், வக்கீல் எப்படி சட்டம் நமக்குச் சாதகம் செய்யும் என அறிவார்.

மேல்லோகம் இருக்கிறது, கீழ்லோகம் இருக்கிறது. எப்படி வந்ததுஎனத் தெரியாதுஎனில் புதிருக்கு விடை கிடைக்காது. மேல்லோகத்திலிருந்து கீழ்லோகம் உற்பத்தியானதில் இரகஸ்யம் உள்ளது. அதைச் செய்தது மனம்.

இந்தலோகம் சச்சிதானந்தத்திலிருந்து வந்ததுஎன அறிவோம். இது அவனது ஜீவனுள் உறைகிறது. சச்சிதானந்தம் - கடவுள் - இவ்வுலகில் அனுபவிப்பவராகவும், அறிபவராகவும், ஈஸ்வரனாகவும் இருக்கிறார். உணர்ச்சி, மனம், சக்தி, ஜீவன் ஆகியவை இரட்டையின் பகுதிகள். ஆனால் இவை அவனுடைய ஆனந்தம், சக்தி, வாழ்வின் பிரதிநிதிகளென அறிவோம். நாம் இறைவனுக்கு எதிராக இருக்கிறோம் எனவும் காண்கிறோம் (நம் உணர்ச்சி வேதனை தருகிறது,



இறைவனின் உணர்ச்சி ஆனந்தம்). அதனால் தெய்வீக வாழ்வுக்கு பூலோகத்தில் இடமில்லை. நம் தாழ்ந்த நிலையை உயர்த்துவது ஒரு வழி. அல்லது நம் உடலை இறைவனின் தூய வாழ்வுடன் பரிமாறிக் கொள்ள வேண்டும். அதேபோல் நம் வாழ்வையும், மனத்தையும் இறைவனுடைய வாழ்வுடனும், மனத்துடனும் மாற்றிக் கொள்ள வேண்டும். இது உண்மையானால் பூவுலக வாழ்வை மேலுலக வாழ்வுக்கு மாற்றிக் கொள்கிறோம். இவ்வுலகில் தெய்வீக வாழ்வில்லை என ஆகும்.

**பக்கம் 160 / பாரா 3**

*நமக்கு தெய்வீகம், அதற்கெதிரானதுஎனப் பிரிவுண்டு. அழுக்கு, தவறு, குற்றம், குறை ஆகியவை தெய்வத்திற்கு எதிரானவைஎன நாம் நம்புகிறோம். இருப்பவை மேலே 4 தத்துவங்கள் - சத், சித், ஆனந்தம், சத்தியஜீவியம். அவை மட்டுமே செயல்பட முடியும். ரூபத்தாலானது உலகம். தெய்வீக தத்துவங்கள் ரூபமான உலகை சிருஷ்டிப்பது நமக்கு தெய்வத்திற்குப் புறம்பானதாகத் தோன்றுகிறது.*

நாட்டில் நடக்கும் நல்லவையெல்லாம் செய்வது சர்க்கார். அதைச் செய்ய சர்க்காருக்குப் பணம் வேண்டும். மக்கள் நிம்மதியாக வாழ திருடனும் குற்றவாளியும் ஜெயிலில் இருக்க வேண்டும். அமைதி தேடும் மக்களே ஆர்ப்பாட்டம் செய்வர். அவர்களை அடக்காமல், தடியடி, குண்டுவீச்சுமூலம் அடக்காமல் அம்மக்களுக்கு நிம்மதியான வாழ்வை சர்க்கார் தரமுடியாது. வரி வசூல் செய்தாலும், அராஜகத்தை அடக்கினாலும், நாமே திருடும்பொழுது நம்மைக் கைது செய்தாலும், நாம் ஓலமிடுகிறோம். நமக்குச் சர்க்கார் நல்லது செய்ய முனைந்தால் நமக்கு அது தொந்தரவாவது நம் மனப்போக்கு.

*இந்த ரூபங்கள் - ஜீவன்கள், ஜீவராசிகள், பொருள்கள் - இறைவனின் உடலுக்குள் சிருஷ்டிக்கப்படுகின்றன, வெளியில் இல்லை. (இறைவனுக்கு வெளியே எதுவுமில்லைஎன்பது நம் அடிப்படை). இறைவனுடைய உடலுக்குள்எனில் அவன் சக்தி, ஆனந்தத்திற்குள் எனப் பொருள். முழு எண்ணம் உலகை சிருஷ்டிக்கிறது. இந்த ரூபங்கள்*

***அதற்குட்பட்டவை, அதன் செயல்படும் முறைக்கு உட்பட்டவை. அதனால் ரூபலோகத்தில் - அதாவது நம் லோகத்தில் - தெய்வீக ஜீவியம் செயல்படாது, தெய்வத் திருவிளையாடலிருக்காதுஎனக் கூற முடியாது. இந்த ரூபங்கட்கு உதவியாக மனமும் சக்தியும் தேவை. அவை அவற்றிற்குரிய அடிப்படை - பொருள். அவை அவசியமாக இருப்பதால் அவற்றால் இந்த ரூபங்கள் சிதையும், சிதறும்என நாம் நம்பவேண்டிய அவசியமில்லை.***

செய்தி கடிதம், தந்தி, ஆள், ஈமெயில்மூலம் போகிறது. இவை செய்தி உலவ அவசியம். இவற்றால் செய்தி தவறாக மாற்றப்படுவதும் உண்டு. மாற்றப்பட வேண்டும், தவறாக அவசியம் மாறும்என்று நினைக்கும் அவசியமில்லை.

***மனம், உயிர், உடல் தெய்வீக சத்தியத்தில் தூய்மையாக இருக்க முடியும். அதனால் நம் வாழ்விலும் அவை அதே தூய்மையைத் தாங்கி வர முடியும். நம் வாழ்வில் அவை இவ்வுயர்ந்த செயல்கட்கு உபசெயல்களாகும். அதனால் உயர்ந்த சக்தி அவைமூலம் செயல்பட முடியும். மனம், உயிர், உடலுக்கு தெய்வீகம் இருப்பது சாத்தியம். அவை ஒரு ஜென்மம்என்ற சிறு காலத்துள் தங்கள் திறனை முழுவதும் வெளிப்படுத்த முடியாது. விஞ்ஞானம் பிறப்பிலிருந்து இறப்புவரை அறியும். அதற்கு முன்னும், பின்னும் அது அறியாது. இன்று மனம், உயிர், உடல் தடுமாறிச் செயல்படுவதற்குக் காரணம், அவை இருளில் கண்மூடிச் செயல்படுகின்றன. தெய்வீக சக்தி தானே வளர்வது. அது இவற்றுள் நுழைந்தால் மனம் விரியும், உணர்ச்சி நெகிழும், உடல் தன் இருளைக் கடந்துவரும். அதன் வழி மனிதச் செயல் வளரும் பரிணாமச் செயலாகும். அது தூய்மையான சத்தியஜீவியச் செயல் ஆகும்.***

சுயநலமான பெற்றோர் கடுமையாக இருக்கின்றனர். குழந்தை படிக்கவில்லைஎன்பதையே அறிய முடியாமல் இருக்கின்றனர். வீட்டு வேலைக்கு உதவியாகக் கொள்கின்றனர். பிள்ளைகளைக் கொடுமைப்படுத்துகின்றனர். சுயநலம் பரநலமானால், கடுமை இனிமை ஆகும்.



**பக்கம் 161 / பாரா 4**

***அது உண்மையானால், மனித மனம், உயிர், உடலில் தெய்வீக ஜீவியத்தை வெளிப்படுத்தி நிலைநிறுத்த முடியும். முடிவில் தெய்வீக ஜீவியம் தான்பெற்ற வெற்றியை வளர்த்து மனம், உயிர், உடலை அதனுள் வளர்த்து, சத்தியத்தின் பிம்பமாக்கும்என நம்பலாம். இது ஆத்மாவில்மட்டும் சித்திக்காது. இந்த சித்தி - பூலோகச் சொர்க்கம் - அடிப்படையான ஜடப்பொருளையும் வெல்லும்.***

இந்தியாவில் எங்கு திருட்டுப் பையனைப் பிடித்தாலும் அவன் சொந்த ஊர் கேப்மாரிஎன போலீஸ் அறிந்தது. அவர்களை நல்வழிக்குக் கொணர சர்க்கார் ஒரு பஞ்சாலையை அங்கு ஆரம்பித்தது. அதன்பின் அவ்வூர் மக்கள் தொழிலாளிகள் ஆனார்கள். பிக்பாக்கட் சப்ளை நின்றது. 30 ஆண்டிற்குப்பின் அடுத்த தலைமுறைக்கு ஆலையில் வேலை கிடைக்கவில்லை. மீண்டும் பிக்பாக்கட் சப்ளை அகில இந்தியரீதியில் தொடர்ந்தது. ஒரு தலைமுறை மாறினாலும் அடுத்த தலைமுறைக்குப் பரம்பரைக் குணம் தொடர்கிறது. நம்மை ஜீவியம், பொருள் என பகவான் பிரிக்கிறார். படிப்பாலும், பண்பாலும் ஜீவியம் மாறும். அதனடியில் உள்ள ஜடம் மாறாது. அது மாறுவது திருவுருமாற்றம். கேப்மாரி அனுபவம் அதை நிரூபிக்கிறது. தெய்வீகஜீவியம் மாற்றத்தைத் தொடர்ந்து நம் ஜடப் பொருளையும் மாற்றும்என மேலே கூறியது சொல்கிறது.

முதலில் கூறியது அகத்திற்குரியது. அநேகர் இதைப் பெரும்பாலும் பெற்றுள்ளனர். அடுத்தது புறத்தில் பெறும் வெற்றி. இதுவரை எவரும் அதைப் பெறவில்லை. இவ்வெற்றி நம் பாதாளத்துள் இருக்கிறது. அதன் நினைவில் பொதிந்துள்ளது. அது பூமாதேவியின் சுபாவத்திற்குரியது. அது இனி வரஇருப்பது. அது வரும்பொழுது அது மனித குலத்தில் இறைவன் பெற்ற வெற்றியாகும். தற்சமயம் நம் வாழ்வு அரைகுறை ஆனந்தம் பெறுகிறது. அரைகுறை சோகச்சாயல் உடையது. அது இனி தேவையில்லை. இங்கு வெற்றியுண்டு. அத்துடன் ஆனந்தமும் அதன் வெற்றியும் வரும். இறைவன் இகவாழ்வில் தன் அருள் மணம் வீசப் பரவுவான்.

**பக்கம் 161 / பாரா 5**

***மனம், உயிர், உடல், அவற்றின் உயர்ந்த உற்பத்தி ஸ்தானத்தில் என்னவாக இருக்கின்றன? அவை தெய்வீக சிருஷ்டியில் சத்தியத்தால் நிரம்பிப் பூரண முழுமையடைந்தால் என்னவாக இருக்கும்என்பதை நாம் ஆராய வேண்டும். அப்பொழுது அவை அஞ்ஞானத்தால் முழுமையிலிருந்து பிரியா.***

படிக்காதவனைவிடப் படித்தவன் உயர்ந்தவன். படித்தவன் இலட்சியமாக வாழ்ந்தால் அவன் படித்தவனைவிட உயர்ந்தவன். மனம், உயிர், உடல் படிக்காதவன்போன்றவை. இவை அவற்றின் உற்பத்தி ஸ்தானத்தில் படித்தவன்போலிருக்கும். மனம், உயிர், உடல் தற்சமயம் இருளால் நிறைந்துள்ளன. ஆதியில் அக்குறையில்லை. ஆனால் அவற்றிற்கு அதையும்விட உயர்ந்த கட்டம் உண்டு. ஆதியிலும் அவை சத்தியத்தால் நிரம்பியோ, பூரணம் பெற்றோ இல்லை. தூய்மையாக இருந்தன. பூவுலகில் அஞ்ஞானத்திலிருந்து வெளியேறினால் ஞானம் பெற்று, சத்தியம் பெறலாம், பூரணம் பெறலாம். இது படித்தவன் இலட்சியவாதியாவதுபோன்றது.

அவை தேடும் இலட்சியம் ஏற்கனவே மேலே இருக்கவேண்டும். (ஜடத்திலிருந்து பரிணாமத்தால் விலங்குடன் எழும் மனிதர் நாம். இது மனம் எழுவது. ஆத்மா ரூபத்துள் வந்ததிலிருந்து இன்னும் விடுதலை பெறாதநிலை நம்நிலை. ஒளி தன் நிழலுள் மறைந்த நிலை நாம் சிருஷ்டிஎன அறிவது. அந்நிலை பூரணமாகி இருண்ட ஜடம் உற்பத்தியாயிற்று). நாம் தேடும் சிறப்பு பல. நம் பரிணாம இலட்சியமும் பல. அவை ஏற்கனவே முழுஎண்ணத்துள்ளிருக்க வேண்டும். அங்கே உருவம் பெற்று உயிரோடு அவை இருந்தால்தான் நாம் அதை நோக்கிச் செல்ல முடியும். தெய்வீகஞானம் முன்கூட்டிக் காத்திருப்பதை நாம் இலட்சியம் என்கிறோம். இலட்சியம் நிலையான சத்தியம். நாமுள்ள நிலையில் நாம் அதை இன்னும் அடையவில்லை. இறைவனும், பிரம்மமும் அறியாத இலட்சியத்தை அரைகுறை மனிதர்களாகிய நாம் கண்டு உற்பத்தி செய்யப்போகும் இலட்சியமன்று அது.



**பக்கம் 162 / பாரா 6**

***மனித வாழ்வின் சிறைப்பட்ட அரசன் மனம். மனத்தின் சூட்சுமம் ஒரு ஜீவியம். அது அளக்கும், வரையறை செய்யும், பொருள்களினின்று ஒரு பகுதியை வெட்டி எடுக்கும். முழுப்பொருளின் பகுதியை வெட்டி எடுத்து, அதை முழுமையானதாகத் தன்னுள் பெற்றிருக்கும். பகுதி, பின்னமானவற்றையும் மனம் இப்படிக் கருதுகிறது. இது மனத்தின் தொழில். பொருள்களை முழுமையாகக் கருதுவது அதன் சுபாவம். அவற்றை முழுமையின் பகுதியாக அதனால் காண இயலாது.***

கிராமப்புறங்களில் படிக்காத கூலிக்காரன், 60 வயதைக் கடந்தவன் சந்தோஷமாக வாழ்ந்தவனாக இருப்பதுண்டு. அவனைப் பொருத்தவரை அவனுக்கு வாழ்வு சௌகரியமானதால், அவன் மனநிறைவு பெறுவான். படிப்போ, அறிவோ, அனுபவமோ இல்லாவிட்டால், உள்ள நிறைவு உலகத்து நிறைவாகத் தெரியும். அப்படிப்பட்டவன் “உலகமெல்லாம் அறியும்” என்றால், அவன் ஊர் முழுவதும் அறியும்எனப் பொருள். அவனுக்கு அவன் ஊர் உலகம். மனம் அத்தகையது. அவன் ஊர் அவனறிந்த உலகம்என்பதைப் போல, மனம் கண்ட சிறு பகுதி அதற்கு முழுமையாகும்.

***சில சமயங்களில் மனம் தான் காணும் பகுதியை முழுமையில்லைஎன அறியும். இருப்பினும், மனம் அப்பகுதியை முழுமையாகவே கருதும். அப்படியில்லையெனில் மனம் செயல்பட முடியாது.***

தான் வேலை செய்யும் கம்பனியே உலகமில்லை. அது உலகத்தின் பகுதியென அறிந்தாலும், மனிதனால் தன் கம்பனியே எல்லாம்எனக் கருதாமலிருக்க முடியாது. கம்பனி ஊரிலும், உலகிலும் பகுதியென அவன் மனம் ஏற்றுக் கொண்டால் கம்பனிக்கு அவனால் ஆர்வமாக உழைக்க முடியாது. அவனது முழுத்திறமை வெளிப்பட அவன் கம்பனியே எல்லாம்என நினைக்க வேண்டும்.

***இது மனத்தின் சாரமான குறிப்பிட்ட குணம். அதன் எல்லாச் செயல்கட்கும் இந்தக் குணம் உண்டு. கருவாக எண்ணமிடுவதிலும்,***

***உள்ளே ஆழ்ந்து உணர்வதிலும், உடலால் உணர்ச்சிமூலம் அறிவதிலும் இதே முத்திரையிருக்கும். படைப்புக்குரிய எண்ணத்தையும் மனம் இது போலவே கருதும். ஒரு முழுமையினின்று ஒரு பகுதியை மனம் முழுமையெனக் கருதி, உணர்ந்து, வெட்டியெடுத்து, முழுமையாகக் கொண்டாடுவது அதன் இயல்பு. அப்பகுதியை தனக்குச் சொந்தமாகப் படைக்கக் கொடுத்ததாக மனம் கொள்கிறது. மனத்தின் செயல்கள், ஆனந்தம் ஆகிய அனைத்தும் முழுமையின் பகுதியை முழுமையாகக் கருதுவதால் ஏற்பட்டவை. அவற்றை மேலும் பகுத்து, அப்படி ஏற்பட்ட பகுதிகளை முழுமையாகத் தொடர்ந்து கொண்டாடுவது மனம். மனம் பகுக்கலாம், பெருக்கலாம், கூட்டலாம், கழிக்கலாம். அதனால் இந்த கணக்கைத் தாண்டி வரமுடியாது. (உள்ளூர் கடைக்காரன் உலகிலுள்ள எல்லாப் பொருள்களையும் விற்கலாம். ஆனால் அவற்றுள் எந்தப் பொருளையும் அவனால் உற்பத்தி செய்ய முடியாது). மனம் தன் எல்லையைக் கடந்து ஒரு முழுமையை அறிய முயன்றால் அது திக்குத் தெரியாமல் திகைக்கும். தன் சொந்த ராஜ்யத்தினின்று ஆழங்காணாத அலைகடலுள் வீழும். அனந்தம்என்ற படுகுழியில் விழும். அங்கு மனத்தின் கருத்து, உள்ளுணர்வு, உடலுணர்வு செயல்படாது. தனக்குப் படைக்கத் கொடுத்த பொருளை அனுபவிக்க முடியாது. அனந்தத்தை அறிய, உணர, பெற மனம் முயன்றால் அதற்குக் கிடைப்பது அனந்தமன்று, அனந்தத்தின் அடையாளம்.***

சிறு குழந்தை தாயாரின் புடவையைக் கட்டிக்கொள்ள ஆசைப்பட்டால், அதனால் முடியாது. தன்னைப் புடவையுள் இழந்துவிடும். கல்விபெற குருவை நாடவேண்டும். கல்லூரியை நாடினால் கிடைப்பது கடலெனப் பரவிய கல்வியில்லை. கல்வி கற்றவன் பாண்டித்தியம் பெற்றவன். அவனுக்கு உலகமே பள்ளி, இலக்கியமே பாடபுத்தகம். மனம் பெறும் தெளிவு கல்வி. கல்லூரியை நாடுபவன், வேலை தேடுபவன். அவன் கல்வியை நாடினால் அவனது சிறுஇலட்சியம் அதைப் பெறமுடியாது. அவனுக்குக் கிடைப்பது பட்டம். அது பெருங்கல்வியின் சிறு அடையாள முத்திரை.

மனம் குழப்பத்துடன் அனந்தத்திலிருந்து பெறுவது உருவமற்ற பெரிய குழப்பம். மேகம் சூழ்ந்த விவரமற்ற மண்டலம். நட்சத்திரம்



ஜொலிக்கும் தெளிவான நள்ளிரவன்று. அம்முயற்சியில் ஈடுபட்டால் அதன் பகுக்கும் குணம் எழும். கிடைப்பது பகுதி, அடையாளம், பிம்பம், நிழல், சத்தியமில்லை. மனத்தால் அனந்தத்தைப் பெற்று வைத்திருக்க முடியாது. அனந்தம் மனத்தைப் பெறமுடியும். மனம் அனந்தத்தை அனுமதிக்கும். இதனால் அதை ஆள முடியாது. அனந்தமாகத் தன்னை இழந்து லயித்திருக்கலாம், அனந்தம் மனத்திற்குப் பிடிபடாது. சத்தியத்தின் ஒளிமயமான நிழலில் வரலாம். பெரிய இடத்தில் பெருநிழல் அதன் மீது விழுகிறது. அனந்தத்தை மனம் தனக்கெனப் பெற வேண்டுமானால் அது உயர்ந்து சத்தியஜீவியத்தை எட்ட வேண்டும். மனம் அனந்தத்தைப் பற்றியறிய வேண்டுமானால் மேலிருந்து சத்தியஜீவிய சத்தியம் கொண்டுவரும் செய்திக்குத் தான் சரணடைய வேண்டும்.

**பக்கம் 163 / பாரா 7**

***மனத்தின் சத்தியம், மனத்தின் இயலாமை மனத்துடன் வருகின்றன. அவை மனத்தின் உண்மையான சுபாவத்தையும், செயலையும் நிர்ணயிக்கின்றன. அவை சுபாவம், சுதர்மம். தெய்வீகச் செயல் மனத்திற்கு அதன் வேலையை இப்படி நிர்ணயம் செய்தது. மனம் முழுவதும் மனமாகச் செயல்படுவது மாயை மனத்திற்களித்த திறன். இறைவன் சுயமாகச் சிந்தித்து மனம் பிறக்கும் பொழுதே அதற்கு அளித்த திறமையிது.***

உலகம் பெரியது. தனி மனித வாழ்வு சிறியது, குறுகியது. பெரிய அரங்கில் குறுகிய வாழ்வை நடத்த சிறுகருவி வேண்டும். அது மனம். வாயால் முழுவாழைப்பழத்தைச் சாப்பிட முடியாது. பலாப் பழத்தை அப்படிச் சாப்பிட நினைக்கவும் முடியாது. சிறு துண்டுகளாக வெட்டிச் சாப்பிடலாம். வாழ்வுஎன்ற பெரு முழுமையை சிறுதுண்டுகளாக்க இறைவன் நமக்கு அளித்த துண்டாடும் கருவி மனம். துண்டாடுவது பல வகையின.

1) வாழைப் பழத்தை 4 துண்டுகளாக்குவது ஒரு வகை.
2) டாக்டருக்கு நம் வியாதி தெரியும், நம்மைத் தெரியாது. 6 மாதம் கழித்துப் போனால் அவருக்கு அடையாளம் தெரியாது. கட்டை

விரல் நகத்தை எடுக்க வந்தேன்என்று கூறினால் உடனே அவருக்கு ஞாபகம் வரும். - இது மனிதன்என்ற முழுமையில் ஒரு பகுதியைமட்டும் காணும் திறன், பிரித்துப் பார்க்கும் திறன். இது மனம் பெற்ற திறன்.

3) சீனுவாச இராமானுஜன் பெற்ற மேதாவிலாசம் கண்ணுக்குத் தெரியாமல், அவன் பரீட்சையில் பெயிலானதுமட்டும் தெரிவது அடுத்த வகை.

4) ரேஸுக்குப்போய் சொத்தைப் பல முறை அழித்தவன் கொஞ்சம் காசு வந்தவுடன் பழைய அனுபவத்தைப் பார்க்க முடியாத மனநிலை. மனம் அந்த அனுபவத்தை இன்றுள்ள ஆசையிலிருந்து பிரித்துவிடுகிறது.

5) பதவியிலுள்ளவன் குறை தெரியாது.

ரிஷிகள் மனத்தால் செய்த தவம் சச்சிதானந்தத்தைப் பார்த்து, சத்தைமட்டும் கண்டு, ‘‘அதுமட்டுமிருக்கிறது. அதுவே சச்சிதானந்தம்’’ என்றது மனம் செயல்பட்ட வகை.

***மாயை மனத்திற்குக் கொடுத்த வேலை: அனந்தத்தை அந்தமாக்குவது (பெரியதை சிறியதாக்குவது, அகண்டத்தைக் கண்டமாக்குவது). அளந்து, அளவிட்டு, வெட்டி எடுப்பது. நம் ஜீவியத்தில் மனம் அனந்தத்தையே விலக்கி இதைச் சாதிக்கிறது. எனவே மனம் அஞ்ஞானத்தின் தலைமை அலுவலகம். பிரிவினைஎன்று ஏற்படுத்தியது மனம். பிரித்ததை வினியோகம் செய்தது. அதனால் மனம் உலகை சிருஷ்டித்ததுஎனவும் கருதினர். மனத்தையே மாயைஎனவும் கூறினர்.***

சத்தியஜீவியம் அம்சத்தைப் பிரிக்கிறது, அங்கத்தைப் பிரிக்கவில்லை. சத்புருஷனை சத், சித், ஆனந்தம்என துண்டுபடாமல் பிரித்தது சத்தியஜீவியம். ஏகனை, அநேகனாகப் பிரித்ததும் சத்தியஜீவியமே.

நமக்கு அனந்தமான உலக வாழ்வே மனதில் வருவதில்லை. நம் வாழ்வுமட்டுமே தெரியும். மனம் நம் பார்வையிலிருந்து அனந்தத்தை அறவே பிரித்து விட்டதால் அனந்தமான வாழ்வை நாம் அறியவில்லை. கல்லூரியில் கல்வியை எவரும்



சிந்திப்பதில்லை, பட்டத்தைக் கருத்தாகக் கருதுகின்றனர். கல்வி அனந்தம், பட்டம் குறுகியது. வாழ்க்கை நடக்க சிறியதைப் பாராட்ட வேண்டும். எனவே மனம் பெரியதை நம்மிடமிருந்து பிரித்துவிட்டது. அப்படி நாம் இன்று பெற்றனவெல்லாம் மனத்தால் பெற்றனஎன்பதால் வாழ்வை சிருஷ்டித்ததே மனம் என நினைத்தனர். அடுத்த கட்டத்திற்குப் போய் உலகை சிருஷ்டித்த தெய்வீக மாயையே மனம்எனவும் கூறினர்.

***தெய்வீக மாயை ஞானத்தையும், அஞ்ஞானத்தையும் அறியும். சிறியது பெரியதன் தோற்றம். எனில், சிறியது பெரியதில்லாமல் இருக்க முடியாது. அதன் பின்னணியில் பெரியது இருக்க வேண்டும். சிறியது பெரியதனுள்ளிருக்க வேண்டும், அதனால் உயிர் வாழ வேண்டும். இது உண்மையானால், சிறியதையும் பெரியதையும் உட்கொண்ட பெரியது - முழுமை - இருக்க வேண்டும். அதனுள் இவையிரண்டுமிருக்கும். அவை ஒன்றுடன் மற்றது கொண்டுள்ள தொடர்பைச் சிறப்பாக அறிந்திருக்க வேண்டும். அந்த ஜீவியத்தில் அஞ்ஞானமிருக்காது. ஏனெனில் அனந்தம் தெரியும். சிறியது அதனின்று பிரிக்கப் பட்டிருக்காது.***

வக்கீலுக்குத் தன் கட்சி தெரியும். ஜட்ஜ்க்கு இரண்டு கட்சியும் தெரியும். வக்கீல் மாயையைப்போல் அறியாமையைமட்டும் அறியும். ஜட்ஜ் தெய்வீக மாயையைப்போல் இரண்டு கட்சிகளையும், நியாயத்தையும் அறிவார்.

***மனம் ஒரு உபகருவி. (மனமில்லாமல் உலகமில்லை). மனம் பிரித்துச் சேர்க்கிறது. வாழ்வு விரித்துக் குவிக்கிறது. ஜடம் துண்டாகி, துண்டுகள் ஒன்று சேர்கின்றன. இவையனைத்தும் ஒரே வகையான செயல்கள் - தோற்றத்தை ஏற்படுத்துபவை. இவ்உபசெயல் இறைவன்என்ற ரிஷி, முனிவர் செயல். இது ஒளிமயமான செயல், விழிப்பான செயல். தான் பெரியதில் சிறியதை ஏற்படுத்துவதை அவன் அறிவான். இதை தெய்வீக மனம்எனக் கூறுவோம்.***

இது தனிப்பட்ட செயலன்று. உபசெயல்என்பது தெளிவு. இதை முழுஎண்ணம், சத்தியஜீவியம், சத்தியம்-ஜீவியம் என்கிறோம். இது பிரக்ஞா மூலம் செயல்படுகிறது.

## பக்கம் 164 / பாரா 8

*பிரக்ஞா என்பது சத்தியஜீவியத்தின் பகுதி. காலத்துள் உள்ள பகுதி. சத்தியஜீவியம் இரண்டாகப் பிரியும்பொழுது - காலத்தைக் கடந்தது, காலத்துள் உள்ளது - இடையே மனம் உற்பத்தி ஆகிறது. இதை அகம், புறம்எனலாம். இங்கு அகம்என்பது கடவுள், புறம்என்பது உலகம். இதுவே சிருஷ்டியின் ஆரம்பம், இரகஸ்யம். இந்த இரகஸ்யம் தெரியாததால் உலகம் எப்படிக் கடவுளிலிருந்து உற்பத்தியாயிற்றுஎனத் தெரியவில்லைஎன்றனர்.*

✡ பகவான் ஸ்ரீ அரவிந்தர் கண்ட இரகஸ்யங்களில் இது *தலையானது.*

*இறைவனை இங்கு பகுக்க முடியாத முழுமை என்கிறார். இறைவன் சுறுசுறுப்பாகவும், உருவகப்படுத்துபவராகவும் - ஜீவியத்திற்கு உருவம் தருவது - இருக்கிறார். இறைவன் அனைத்திற்கும் உற்பத்தி ஸ்தானமாகவும், அறிபவராகவும், சாட்சியாகவும், உடையவராகவும் இருக்கிறார். கவி தன் காவியத்தைத் தானே படிப்பது போல, இறைவன் தன் திருஷ்டியை தாமே விமர்சனம் செய்கிறார். சிருஷ்டி வேறு, இறைவன் வேறில்லை. இருந்தாலும், அவை வேறாக இருப்பதாக இறைவன் செயல்படுகிறான். இதுவே இறைவனின் ஐக்கியத்தில் ஏற்பட்ட முதல்பிளவு, பிரிவினை. உலகிலுள்ள எல்லாப் பிரிவினைகட்கும் இதுவே ஆரம்பம். புருஷன், பிரகிருதிஎன்ற பிரிவினை இது. புருஷன் தன் திருஷ்டியால் சிருஷ்டிக்கிறான். பிரகிருதி தன் சக்தியால் சிருஷ்டிக்கிறான். புருஷனும், பிரகிருதியும் ஒரே ஜீவன், ஒரே வாழ்வு. ஏற்படும் ரூபங்கள் அனைத்தும் அவனே, அவனுடைய ரூபங்களே. ஏற்படும் செயல்கள் அனைத்தும் அவனே, அவன் செயல்களே. பிரக்ஞாவின் கடைசி செயலாக புருஷன் தன்னை, தன் படைப்புக்குள் செலுத்தி, அவற்றினுள்ளிருந்து அதன் கோணத்தில் மற்றதையும் உலகையும் காண்பது.*

தலைவன் தொண்டர்களைத் தலைமை தாங்கி நடத்துகிறான். தலைவன், தொண்டர்என்பது பிளவு. மேலும், தலைவன் ஒவ்வொரு தொண்டருடனும் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டு, அத்தொண்டர் நோக்கத்தில் தலைவனையும், அடுத்தவரையும் காண்பது.



## பக்கம் 165 / பாரா 9

*பிரக்ஞாவின் செயலால் முழுமையான இறைவன் புருஷன், பிரகிருதி எனப் பிரிந்தான். பிரிவினை எழுந்தது. இதன் முதன் விளைவு அனந்தம் இரண்டாகப் பிரிந்து காலம், இடமென ஆயிற்று. இரண்டாவதாக எங்கும் நிறை ஏகன், அநேகனானான். ஆத்ம விழிப்புடன் இறைவன் இம்மாறுதலுக்குத் தன்னை உட்படுத்திக் கொண்டு சாங்கியம் கூறும் பல புருஷர்களை ஏற்படுத்தினான். மூன்றாவதாகப் பல புருஷர்கள் - ஆத்ம ரூபங்கள் - தனித்த வாழ்வை உண்டு பண்ணிற்று. இது ஏகன் தன் ஐக்கியத்தை பரவலான ஐக்கியமாக்கியதாகும். பல புருஷர்கள் - பல ஜீவாத்மாக்கள் - ஒவ்வொருவரும் தனித்தனிப் பிரகிருதியைப் பெறாததால், பிரிந்து நிற்பது தவிர்க்க முடியாது. எல்லா ஜீவாத்மாக்களுக்கும் ஒரே பிரகிருதி பொதுவானது. (அப்படியே இருக்க முடியும். ஏகனுடைய ஆத்ம ரூபங்கள் புருஷர்கள். அவனுடைய ஆயிரம் சிருஷ்டிக்கு அவை தலைமை தாங்குகின்றன). இருப்பினும் ஒரே பிரகிருதி ஏற்படுத்திய ஒரே உலகில் அப்புருஷர்கட்குள் தொடர்புண்டு. ஒவ்வோர் ஆத்ம ரூபத்திலும் உள்ள புருஷன் தன்னில் தன்னை மறந்து இரண்டறக் கலக்கிறான். தன்னைத் தன் ரூபத்திற்குள் வரையறுத்துக் கொள்கிறான். அடுத்த புருஷர்களை வேறாகக் கருதுகிறான். அவர்கள் தன் பிற அம்சங்களைப் பிரதிபலிப்பதாகக் கொள்கிறான். தன்னுடன் இணைந்த புருஷனானாலும் உறவில் வேறு தொடர்பு உள்ளவனாகக் கருதுகிறான். அளவிலும், அசைவிலும், சக்தி, ஜீவியம், பொருள், ஆனந்தம் ஆகியவற்றின் நோக்கிலும் அவை காலத்தாலும், இடத்தாலும் வேறுபடுபவையாகக் கருதுகிறான். தெய்வீக வாழ்வில், தன்னை முழுவதும் அறியுமென்பதால், இப்பிரிவினை தவிர்க்க முடியாததில்லை. ஆத்மா இந்த ரூபங்கட்கோ, அம்சங்கட்கோ அடிமையாக வேண்டுமென்பது இல்லை. நாம் உடலோடு ஐக்கியப்படுவது போன்றது இது, அகந்தையுடன் இணைவதுபோன்றது. காலத்துள் ஒரு மணித்துளியுடன், இடத்தில் ஒரு புள்ளியுடன் நாம் இணைந்து அடிமைப்படுவதுபோன்றது. இத்தனையுமிருந்தாலும், தெய்வீக ஆத்மாவின் சுயஞானம் அப்பிரிவினையைத் தடுக்க வல்லது. நம் வாழ்வில் பிரிவினை தவிர்க்க முடியாததாகத் தோன்றுகிறது.*

சர்க்கார் ஒன்றே, இலாக்காக்கள் பல. கம்பனி முதலாளியினுடையது. அதற்கு ஏராளமான கிளைகள் உண்டு. கிளைகள் கம்பனியைப் பிரிப்பதில்லை. இலாக்காக்கள்

கம்பனியைப் பிரிப்பதில்லை. நடைமுறையில் பிரிந்ததாகச் செயல்படுகின்றன. போட்டி போடுவதும் உண்டு. கிளை எத்தனையானாலும், இலாக்கா எத்தனையானாலும், கம்பனி ஒன்றே. அதுபோல் புருஷன், பிரகிருதிஎனப் பிரிந்தாலும், பல ஜீவாத்மாக்களிருந்தாலும், காலத்தாலும், செயலாலும், ஞானத்தாலும், இடத்தாலும், அவை பிரிந்து தோன்றினாலும், பிரிவினையில்லை, முழுமையுண்டு.

**பக்கம் 165 / பாரா 10**

***மனம் பகுக்க, துண்டு செய்ய ஆரம்பித்துவிட்டது. ரூபம் தனி ஜீவனாகத் தோன்றுகிறது. ரூபம் அடுத்த ரூபத்துடன் தொடர்பு கொள்கிறது. ஜீவனின் உறுதி அதே போல் பிரிந்து, தனித்து, அடுத்த ஜீவனின் உறுதியுடன் தொடர்பு கொள்கிறது. ஜீவனின் ஞானம் பிரிந்து அடுத்த ஜீவனின் ஞானத்துடன் தொடர்பு கொள்கிறது. தெய்வீகஆன்மாவுக்கு இவை தோற்றம், அது ஏமாறுவதில்லை. ஜீவனின் தோற்றங்களை அது அறியும். தன் ஜீவனின் சத்தியத்தில் தன் வாழ்வை நிலைநிறுத்துகிறது. மனத்தை உபகருவியாகப் பயன்படுத்துகிறது. அடிப்படை அதன் அனந்த ஞானம். மனம் உபகருவி. இப்பிரிவு அடிப்படையான முழுமையைப் பொருத்தது - அது பகுதிகளின் தொகுப்பன்று. அது துண்டுகள் சேர்ந்த முழுமையன்று. அதுவும் மனத்தின் தோற்றமே. எனவே பிரிவினைக்கு உண்மையில்லை. ஆன்மா தன் விவரிக்கும் சக்தியைப் பயன்படுத்துகிறது. ரூபங்களும், சக்திகளும் தெளிவாகப் பிரிந்து அலையில் பங்கெடுக்க ஆத்மா அவற்றைப் பயன்படுத்துகிறது. ஆத்மா அவற்றால் பயன்படுத்தப்படவில்லை.***

ஜீவன் என்பதைக் கல்விக்கு ஒப்பிடலாம். கல்வி ஸ்தாபனங்கள் பிரிகின்றன. என்ஜினியரிங், மெடிகல்எனப் பிரிகின்றன. கலைக் கல்லூரி வேறு. கலை பல பகுதிகளாகப் பிரிகின்றது. இது பிரிவினைத் தோற்றம். இதனால் கல்வி பிரிக்கப்படுவதில்லை. அடிப்படையில் கல்விஎன்பது ஒன்றே.

**பக்கம் 166 / பாரா 11**

***தானே தன்னைக் கட்டுப்படுத்தும் மனம் வேறு, வேறு வழி இல்லாமல் கட்டுப்படும் மனம் வேறு. அதை உற்பத்தி செய்ய இதுவரை கூறியவை போதாது. ஒரு புதுஅம்சம் தேவை - அது மனம் தன் செயலால் கட்டுப்படுவது. அதனால் நாம் ஏமாறுவோம். எதையும் தான் கட்டுப்படுத்தும், ஏமாறாது. ஒன்று மனித மனம், அடுத்தது தெய்வீக மனம். புதிய அம்சம் நாம் தேடுவது அஞ்ஞானம், அறியாமை, அவித்யா. இது மனத்தின் தன்மை, தன்னை மறக்கச் செய்யும் குணம், சத்தியஜீவியத்தினின்று மனத்தைப் பிரிப்பது. சத்தியஜீவியம் திரைக்குப் பின்னாலிருந்து மனத்தை ஆள்கிறது. அப்படிப் பிரித்தால் மனம் பொதுவானதைக் காணும் திறனை இழக்கும், குறிப்பானதை மட்டும் காணும். அனந்தம் பிரபஞ்சத்தில் பொதுவானதாகவும், குறிப்பிட்டதாகவும் வெளிப்படுகிறது. பிரிக்கப்பட்ட மனம் பொதுவானதைக் காணும் திறனை இழந்து, குறிப்பிட்டதைக் காணும் திறனை மட்டும் பெறும். அப்படிப்பட்டது குறுகிய மனம். அதற்குக் கண்டதே காட்சி, கொண்டதே கோலம். தோள் கண்டார், தோளே கண்டார்என அடுத்ததைக் காணாது. பகுதியை முழுமையாகக் காணும். பகுதிகளின் தொகுப்பை வளர்க்கும். முழுமை, பூரணம், ஒருமை, அனந்தத்தின் அம்சம் அதற்கில்லை.***

சம்பளக்காரனுக்கு லாபத்தில் பங்கில்லை. அவன் சம்பளக்காரனாகவே ஓய்வு பெறுவான். சொந்தமாகத் தொழில் செய்பவனுக்கு உயரும் வாய்ப்புண்டு. ஸ்தாபனத்துடன் இணைந்து இலட்சியமாக வேலை செய்பவன் எந்த வேலையானாலும், 'இது எப்படி ஸ்தாபனத்தைப் பாதிக்கும்?' என்று நினைப்பான். சுயநலமி 'இதில் எனக்கு என்ன இலாபம்?' எனக் கருதுவான். மனம் சிறியது, சுயநலமானது. சத்தியஜீவியம் பெரியது, பொதுவானது, தெய்வீகமானது.

**பக்கம் 166 / பாரா 12**

***மனம் அனந்தத்தின் செயல். அது பிரிப்பதுடன், முடிவின்றிச் சேர்க்கிறது.***

குழந்தையைத் தாயார் வளர்க்கிறாள். அவன் பெரியவனானபின் தாயாரை அவன் கவனிக்கிறான். தன்னை வளர்த்த தாயாரைத் தான் வளர்க்கிறான். **கடமை மாறுகிறது. உறவு நீடிக்கிறது.** அனந்தம்என்பது அந்தம்என்ற சொல்லுக்கு எதிரானது. அந்தம்என்றால் முடிவு. அனந்தம்எனில்

முடிவில்லாதது. மனம் முடிவு இல்லாததின் செயல். அது பிரிக்க ஆரம்பிக்கிறது. அணுவானபின் பிரிக்க முடியாது. பிரிக்க முடியாவிட்டால் செயல் நிற்காது. ஏனெனில் அது அனந்தத்தின் செயல். பிரிப்பது முடிந்தாலும் செயல் நிற்கக்கூடாதுஎன்பதால், பிரிப்பது சேர்ப்பதாக மாறுகிறது. அணுக்கள் சேர்க்கப்பட்டு பொருள்களாகின்றன. அனந்தம் தன்னை அழியாமல் பாதுகாப்பதால் செயல் திசை மாறித் தொடர்கிறது. தாய்க்கும், மகனுக்கும் உள்ள தொடர்பு முடிவற்றது. ஆரம்பத்தில் தாய் குழந்தையைக் கவனிக்கிறாள். அவள் கடமை முடிந்துவிட்டபின் அவன் தாயைக் கவனிக்கிறான். **தாய், சேய் உறவு அனந்தம்.**

***மனம் சிறுதுண்டுகளாக்குகிறது. துண்டு முழுமையானது. முழுமையின் அளவு குறைந்து கொண்டே போகிறது. அணுவாகி, அணுவின் மூலமாகின்றன. அவை மறையுமானால் மறையும். அணு மறைய முடியாது என்பதால், அது மறைவதில்லை. பிரிக்கும்செயல் ஞானத்தை அடிப்படையாகக் கொண்டது. முழுமைஎன்பது, அணுஎன்பது சக்தியின் செறிவுஎன்று அந்த ஞானம் கூறுகிறது. சக்தியின் செறிவுஎன்பது போல் ஒவ்வோர் அணுவும் ஜீவியத்தின் செறிவு, ஜீவனின் செறிவு. அணு பகுதி. அப்பகுதி முழுமை. இம்முழுமை ஜீவனின் தோற்றம். ஜீவன் அணுவை தன்னுடைய புறத் தோற்றமென அறியும். சேர்க்கையான பொருள்கள் கரைந்து சூன்யமாவது மனம் செய்வது. சத்தியஜீவியம் அதை ஞானத்தால் புரிந்து கொள்ளும். அணுஎன்ற ஜீவனின் தோற்றம் தோற்றத்தை இழந்து, மீண்டும் தன்னை வந்தடைந்ததாக சத்தியஜீவியம் அறியும். மனம் தரும் வாழ்வு பகுதியான தோற்றம். சத்தியஜீவியம் அறிவது கண்டமான அணு தோற்றத்தை இழந்து, அதன் ஆதியான விழிப்பான ஜீவனாக, சுயச்செறிவையடைகிறது. வழி எதுவானாலும் முடிவு ஒன்றே. ஜீவன் ஐக்கியமான நிலையான பிரம்மம். அதன் ஐக்கியம் அழியக்கூடியதன்று. வழி பிரிவினையானாலும், ஒன்று சேர்ப்பதானாலும், முடிவில் பகுதி முழுமையை அடைகிறது. முடிவை நிர்ணயிப்பது மூலம், செயலன்று. மனம் தன் செயலை இந்த ஞானத்திற்குட்படுத்திக் கொண்டால், நாம் பின்பற்றும் முறை - பிரிவு, சேர்ப்பது - அதன் உள்ளுறை சத்தியத்தை வெளிப்படுத்தும். வெளிப்படுத்துவதுடன் அம்முறையைப் புறக்கணிக்காது. உண்மையில் பிரிவினை என்பதேயில்லை. ஆயிரமாகப் பிரிந்து, அனந்தமாகப் பிரிந்து, ரூபத்தையேற்று, பிரிந்தவை தொடர்பு கொள்வது காலத்திலும்,***



***இடத்திலும் முழுமையான ஜீவன் லீலை செய்ய அவசியமானதுஎன நாம் அறியலாம். எவ்வளவு பிரிந்தாலும், எப்படிச் சேர்த்தாலும் புதியதான பொருளை அடைய முடியாது. அனைத்தும் ஆதிசக்தியின் ரூபங்களேயாகும். ஆதிசக்தியே சத்தியம். மற்றவையனைத்தும் தானே பெற்ற ரூபத்தின் லீலை. அவை அனைத்தும் சித்சக்தியின் அல்லது சக்தியின் ஜீவியத்தின் சுயரூபங்கள்.***

ஒன்று பலவாகத் தோன்றுவதை வாழ்வில் நாம் ஆயிரமாயிரம் வகைகளாக அறிவோம். நாம் நின்று, நிதானித்து அவற்றின் தத்துவத்தை - தாத்பர்யத்தைக் - கருதி, ஆழ்ந்து உணர முயல்வதில்லை.

- ❀ ஜீவன் பிரிந்து ஜீவாத்மாக்களாக ஆவது நடிகன் 40 பாத்திரமாக நடிப்பதுபோலாகும். பாத்திரம் பல ஆனாலும், நடிகன் நாமறிந்த ஒருவரேயாகும்.
- ❀ மரம், செடி, கொடி, மனிதன், விலங்கு, பேனா, கத்திஎன்பது போல ஆயிரமாயிரம் பொருள்களை நாம் காண்கிறோம். அனைத்தும் பூமாதேவியின் புதுமை. அவை அழிந்து மீண்டும் அவள் மடியில் புகலிடம் பெறுகின்றன. பொருள் மாறலாம், புவனம் மாறுவதில்லை.
- ❀ ஆடு, புத்தகம், தயிர், சொல்போன்ற பல சொற்களை நாம் பேசுகிறோம். அவற்றுள் உள்ள எழுத்துகள் ஆ, டு, பு, த், த, க, ம், த, யி, ர், சொ, ல்என பல வகையானவை. சொற்கள் லட்சக்கணக்கானவை. ஆனால் அனைத்துச் சொற்களும் இப்பல்வேறு எழுத்துகள் பல வகைகளாகச் சேரும் புதுரூபங்களே. ஆராய்ச்சியைத் தொடர்ந்தால் எழுத்துஎன்பது ஒலி. பல எழுத்துகள் பல இலட்சம் சொற்களை ஏற்படுத்துகின்றன. ஆனால் கருத்து வேறுபடுவதால், உண்மை மாறுவதில்லை. உண்மை நாமறிந்த எழுத்துகளே. மேலும் நாம் அறிந்த ஒலிகளே. அதன் பின்போனால் ஒலியின் பின்னுள்ளது எண்ணம். மனம் அதற்கும் பின்னாலுள்ளது. விசாரம் தொடர்ந்தால் மனம், ஜீவியம், ஜீவன், பிரம்மம்என நாம் ஆதியை அடைவோம்.

✡ **தோற்ற மாற்றம் ஆதியின் ஒருமையைப் பாதிக்காது.**

- ✡ **ஒருமையின் வெளிப்பாடு பன்மை.**
- ✡ **ஒருமையுள்ளது, பன்மை தோற்றம்.**
- ✡ **தோற்றம் வேறு, விஷயம் வேறன்று.**

மனம் சத்தியஜீவியத்தின் உபகருவி, உபசெயல். மனம் வேறு, சத்தியஜீவியம் வேறன்று.

**பக்கம் 167 / பாரா 13**

***அவித்தைஎன்ற குறுகிய கருவி எங்கிருந்து வருகிறது? மனம் சத்தியஜீவியத்தினின்று எப்படி விலகியது? ஆரம்பத்தில் பிரிவினை எப்படி வந்தது? சத்தியஜீவியத்தின் எந்த அம்சம் எப்படி குதர்க்கமாகி இந்த நிலை உருவாயிற்று? ஜீவாத்மா தன் கோணத்தில் உலகைக் காண மற்றவற்றை விலக்கியதால் இந்த குதர்க்கம், அவித்யா எழுந்தது. தத்துவ பாஷையில் ஜீவியம் தன்னில் தன்னை இழந்ததால் இது ஏற்பட்டது. ஆத்மா காலத்திலும், இடத்திலும் ஒரு குறிப்பிட்ட செயலுடன் தன்னை இணைப்பதால் இது ஏற்பட்டது. அக்குறிப்பிட்ட செயல் ஆத்ம லீலையின் ஒரு பகுதி. மற்ற ஜீவன்கள் தானில்லைஎன ஜீவாத்மா புறக்கணிப்பதால் இது நடக்க முடிகிறது. பிறர் செயல் தன் செயல், பிறர் நிலை தன் நிலை, பிறர் ஜீவியம் தன் ஜீவியம்எனவும் அதுவே தன் செயலுக்கும், காலத்திற்கும் பொருந்தும்என்பதை புறக்கணிப்பதால் இது ஏற்பட்டது. இந்தநேரம், இந்தரூபம், இந்தசந்தர்ப்பம் முக்கியமாவதால் மற்ற அனைத்தையும் இழக்க வேண்டி வருகிறது. இழந்ததைப்பெற மனம் அவற்றுடன் தொடர்பு கொண்டு உறவாட வேண்டும். காலம் முழுமையானதுஎன்ற எண்ணம் பலனற்றுப் போகிறது. சக்தியும், பொருளும் முழுமையானவைஎன்பதும் இல்லாமற் போகிறது. எல்லா மனமும் ஒரே மனம், எல்லோர் வாழ்வும் ஒரே வாழ்வு, எல்லா உடலும் ஒரே உடல்என்ற வெளிப்படையான உண்மை மறந்து போகிறது. உண்மையில் நிலையாகத் தோன்றும் இவையெல்லாம் சலனத்தின் புரட்சி, வேறொன்றுமில்லை. மனம் எதையும் தனித்துப் பார்க்கிறது. அதன் ரூபங்கள் இறுகிப்போயின. புற அம்சத்தால் அவை மாறாத, அசையாத ரூபமாகக் கருதுகிறது. அப்படியில்லைஎனில், மனம் செயல்பட முடியாது. உண்மையில் அனைத்தும் ஆற்றோட்டமே, மாறி மாறிப் புதுப்பிக்கும் ஓட்டம். குறிப்பிட்ட ரூபமில்லை, மாறாத புற அம்சமில்லை.***



நாம் ஆபீசில் வேலை செய்தால் நமக்குஎன மேஜை, ஒரு வேலை கொடுத்தால் செய்யலாம். ஆபீசிலுள்ள எந்த வேலையையும், எவரும், எப்பொழுதும் செய்யலாம்என்றால் குழப்பம் வரும், வேலை நடக்காது. எனக்கு ஒரு தனிஇடம் கொடுத்தால், அது என்னுடையதுஎன்ற சொந்த உணர்வும், அதன் வழிப் போட்டியும், பொறாமையும், பிணக்கும் எழுகின்றன. தனிப்பட்ட வேலையானாலும், ஆபீஸ் வேலையானாலும் பொறுப்போடு வேலை செய்பவர் எந்த வேலை கொடுத்தாலும் போட்டியின்றி, கருத்தாக வேலை செய்து, ஆபீஸ் காரியத்தை முடிப்பார். பொதுவாக பிரிவதும், போட்டியிடுவதும் மனத்தின் செயல். எல்லாம் ஆபீஸ் வேலை, யார் செய்தாலும் சரிஎன்பது உயர்ந்த மனப்பான்மை.

நிலையான முழுஎண்ணம்என்பதே நிலையானது. அதற்கு ஒழுங்குமுறையுண்டு. ஓட்டத்தில் உறவுண்டு. மனம் பெற முயன்று தோற்பதை முழுஎண்ணம் இயல்பாகப் பெறும். மனம் இவற்றைக் கண்டுபிடிக்க வேண்டும். மனம் இதையறியாது என்பதில்லை. இவை அதன் ஜீவியத்துள் மறைந்துள்ளன. அதன் ஜீவனின் இரகஸ்யத்தில் அது ஒளிந்துள்ளது. அது அறியாமையை ஏற்படுத்தி, ஒளிஎன்பதால் அது மனத்திற்கு ஒளியன்று, இருள். மனம் பிரிக்கும் செயலை ஏற்று, பிரிந்த மனமாயிற்று. தன் செயலில் தன்னை இழந்துவிட்டது, தன் படைப்பில் தன்னை இழந்துவிட்டது.

**பக்கம் 168 / பாரா 14**

***இந்த அறியாமை மனிதன் தன் உடலுடன் ஐக்கியப்படுவதால் மேலும் இருளடைகிறது.***

திருமணமானவுடன் தானும் தன் மனைவியும் வேறு, குடும்பம் வேறுஎன நினைப்பது தவற்றுக்கு ஆரம்பம். தன்னைக் குடும்பத்தைவிட முக்கியம்எனக் கருதுவதால் பிரிவினை ஏற்படுகிறது. நாளடைவில் அது வளர்ந்து தன் குடும்பத்தைவிட - தானும், மனைவியுமான குடும்பம் - தான் முக்கியம்எனக் கருதினால் சம்பளத்தில் பெரும்பகுதியைத் தனக்குச் செலவு

செய்துவிட்டுச் சிறுபகுதியை மனைவி, மக்களுக்குக் கொடுப்பான். சீட்டாட ஆரம்பித்தால், சீட்டு முக்கியமானால், முழுச்செலவும் சீட்டில் போகும். கடன் வாங்கிச் சீட்டாடுவான். குடும்பம் அழியும், தானும் அழிவான். அவன் வாழ்வு இருளால் கவ்வப்படும்.

- ❀ மனம், மனமாகச் செயல்பட வேண்டியது முதலில் தன்னைத் தன் செயலில் இழக்கிறது. ஒரு வேலை செய்யும்பொழுது நாம் வேலையில் எல்லாவற்றையும் மறந்துவிடுகிறோம். இது முதல் தவறு.
- ❀ வேலையில் தன்னை இழந்தவன், அடுத்தாற்போல், அதேபோல் மனத்தில் தன்னை இழந்துவிடுகிறான். சிந்தனையில் ஆழ்ந்தவர் உலகை மறப்பார்.
- ❀ அடுத்த நிலையில் சிந்தனையில் உணர்வில் தன்னை இழப்பது வழக்கம். அப்படிப்பட்டவருக்குப் பார்ப்பனவெல்லாம் தன் ஆசையெனத் தெரியும். தாசி வீட்டிற்குப் போகின்றவர் மனைவியைத் தாசி பேர் சொல்லி அழைப்பார்.
- ❀ முடிவான நிலையில் மனம் உடலோடு ஐக்கியப்பட்டு, தன்னை அதில் இழக்கும். அது மெய்மறந்த நிலை.

தவசி இறைவனை நாடி, நிஷ்டையில் புலன் அவிந்து, சிந்தனையை இழந்து, மௌனத்தை எய்தி, முடிவாகச் சமாதியை அடைகிறார். உடலின் மீது ஊறும் எறும்பு, ஈ அவர் அறிவதில்லை. மனம் உலகினின்று பிரிந்து பகுதியில் தன்னை மறப்பதை நாம் தவசியின் நிஷ்டையில் காண்கிறோம்.

***நமக்கு நம் மனத்தை உடல் நிர்ணயிப்பதாகத் தோன்றுகிறது. மனம் உடலை நினைத்துக் கொண்டிருக்கிறது. உடலின் தேவைகளே மனத்திற்குப் பிரதானம். உடலின் செயல்களும், உணர்வுகளும், தேவைகளும் மனத்தை ஆக்ரமித்துக் கொண்டிருப்பதால், மனம் உடலால்தான் நிர்ணயிக்கப்படுவதாக நினைக்கிறது. நரம்பும், மூளையும் மனம் தனக்காக உற்பத்தி செய்தது, உடலை வளர்க்க மனம் கடைப்பிடித்த உபாயம். தற்சமயம் அவற்றின் செயல்களில் மனம் தன்னை மறந்துவிட்டது. மனம் உடலின்றி செயல்படவல்லது. அதை இப்பொழுது இழந்துவிட்டது. உடல் மனத்தை ஆக்கிரமிப்பது ஆழ்மனச் செயல்.***

மேலே ஈ உட்கார்ந்தால், நம்மையறியாமல் கை ஈயை ஓட்டுவது மனம் அறியாத ஆழ்மனச் செயல். நடப்பது, உண்பது, உண்பது ஜீரணமாவது, மூச்சு விடுவதுபோன்ற எல்லா முக்கியச் செயல்களையும் ஆழ்மனம் செய்கிறது.

***இருந்தால் உயிருக்கு மனம் உண்டு, உயிருக்கு ஜீவன் உண்டென நாம் சிந்திக்கலாம். அவற்றிற்கு உடலில் தங்களை மறக்கும் பரிணாம அவசியமில்லை. அவை ஒரு பிறவியுடன் முடிவதில்லை. உடலெனும் அச்சில் மனம் வார்த்தெடுத்த சிலை நம் உடல். அதனால் உடல் மனம் வழி சிந்திப்பது மனத்தின் ஜீவனாகாது. அது மேல்மனம். அதற்கு உடலின் அனுபவம் மட்டுமே தெரியும்.***

ஓர் ஆர்டரை டைப் செய்யும் டைப்பிஸ்டுக்கு ஏன் அந்த ஆர்டர் போடுகிறார்கள், எப்படி அம்முடிவு வந்ததுஎன்பவை தெரியாது. அவர் செய்வது ஆர்டரை டைப் பண்ணுவது. அதுபோல் மேல்மனம் உள் விவரம் அறியாது.

அதன்பின் உடலின் வாழ்விலும் அடிமனம், ஆழ்மனத்தில் தன்னையறியும் மனம் உண்டு. அது உடலைக் கடந்தது. அதன் செயல் உடலுக்குக் கட்டுப்பட்டதில்லை. மேல்மனம் வேகமாக, தீவிரமாக, ஆழ்ந்து, அகன்று செயல்படும்நேரம் மனத்தின் இந்த உயர்ந்த பகுதியே செயல்படுகிறது. நாம் அதை அறிவது முதல்சித்தி. அதன் சாயல் நம்மீது படுவது முதல்சித்திஎனலாம். அதுவே நம் உள்ளேயுள்ள ஜீவன், ஆத்மா, புருஷா. இதைப் பிராணமயப் புருஷன் எனக் கூறுவர்.

**பக்கம் 169 / பாரா 15**

***பிராணமயப் புருஷன் உயிரின் மனம். உடலின் தவற்றிலிருந்து இது நம்மை விடுவிக்கும். எனினும் மனத்தின் குறையிலிருந்து இதனால் முழுமையாக விடுவிக்க முடியாது. ஆரம்ப அறியாமை இன்னும் தன் ஆதிக்கத்தைச் செலுத்தும். ஜீவாத்மா அனைத்தையும் தன் நோக்கில் காண்பதே ஆரம்ப அறியாமை. அது சத்தியத்தை வெளியிலிருந்து உணர்த்தும். அல்லது தன் கால, இட சந்தர்ப்பங்களிலிருந்து எழுந்து***

*சத்தியத்தைக் கண்ணுறும். இது பழைய ரூபம், பலன், இன்றைய அனுபவங்களால் பாதிக்கப்படும். பிற ஜீவாத்மாக்களை அது அறியாது. எண்ணம், சொல், செயல், பயன், சூட்சும அடையாளம்போன்ற புறச் செயல்களால் மட்டுமே அதை அறிய முடியும். (இவை நமக்கு, நம் உடலுக்கு, நேரடியாகப் புலப்படாதவை). இவை நம் புலன்களைத் தொட்டுணர்த்தும். அதேபோல் இவற்றின் பலனையும் அதனால் அறிய முடியாது. ஏனெனில் அது தன்னைக் காலத்தின் மூலம் மட்டுமே அறியும். பல ஜன்மங்களிலெடுத்த பல உடல்களின் அனுபவத்தால் மட்டும் அறியவல்லது. நம் உடலின் மனத்திற்கு உடலே பிரதானம். அதே போல் தீவிரமான நம் ஆழ்மனத்திற்கு உயிரே பிரதானம். அதனுள் அது கிரகிக்கப்பட்டு செறிந்துள்ளது. அதனால் அது வரையறுக்கப் பட்டது. அத்துடன் தன் ஜீவனை அது இரண்டறக் கலந்து இணைகிறது. இங்கு மனமும் சத்தியஜீவியமும் சந்திக்குமிடத்திற்கு நாம் செல்ல முடிவதில்லை. அதுவே அவை முதலில் பிரிந்த இடம்.*

**பக்கம் 169 / பாரா 16**

*பிராணமயப் புருஷன் பிராணனில் தன்னை இழக்காது. அதற்குச் சொந்தத் திறனுண்டு. தனக்கே சொந்தமாகச் செயல்பட முனைந்து தான் காணும் ஞானத்தின் பிரதிபலிப்பாக அது செயல்பட வல்லது. அதன்பின் தூய்மையான ஞானமுள்ள மனம் உண்டு. அதன் பெயர் மனோமயப் புருஷன். அதுவே ஞானி. அதற்கு மனம்என்றால் என்ன என்று தெரியும். உலகை உடல் மூலமோ, உயிர் மூலமோ காணாமல், அதனால் மனத்தின் மூலம் காண முடியும். நாம் அதையடையும்பொழுது அதை நம் ஜீவாத்மாஎனத் தவறாகக் கருதுகிறோம். இது உயர்ந்த மனம். அடுத்த ஆத்மாக்களை அதனால் பிரம்மத்தின் ரூபங்களாகக் கருத முடியும். உடல் உணர்வு, உணர்வால் பாதிக்கப்படாமல் செய்திகளை மனத்தால் ஏற்க அதனால் முடியும். ஐக்கியத்தை மனோமயப் புருஷன் மனம் புரியும் வகையில் உருவகப்படுத்துகிறது. பிறர் மனத்திலும், வாழ்விலும் அதனால் நேரடியாகப் பங்குகொண்டு செயல்பட முடியும். (நம் அன்றாட வாழ்வில் நாம் மறைமுகமாக அது போல் செயல்படுகிறோம்). இந்தத் தூய மனமும் ஆரம்பக் குறையற்றதன்று. தன்னைத் தனித்த மனமாகக் கருதி, விஷயங்களைத் தீர்மானிக்கிறது. தன்னையே உலகின் மையமாகக் கொள்கிறது. அதன் மூலம் அது உயர்ந்த பிரம்மத்தையும், சத்தியத்தையும் அடைய முயல்கிறது. பிறர், அதற்குப்பிறரே. அனைவரும் தன்னைச்*



*சூழ்ந்தவராகக் கருதும். விடுதலையடைய அது உடல், உயிரிலிருந்து விடுபட்டு, மனத்திலிருந்தும் விடுபட்டு ஐக்கியத்துள் மறைகிறது. அங்கும் அஞ்ஞானத்திரையுள்ளது. அது மனத்திற்கும் சத்திய ஜீவியத்திற்கும் இடைப்பட்டது. சத்தியம் அதைக் கடப்பதில்லை. சத்தியத்திலிருக்காமல் திரையைக் கடந்து வரும்.*

**பக்கம் 170 / பாரா 17**

*திரையைக் கிழித்து, பிரிக்கும் மனத்தை அடக்கியபின்னரே மௌனமான, அமைதியுள்ள சத்தியஜீவியச் செயல் வெளிப்படும். மனம் சத்தியத்தை மீண்டும் அடையும். அங்கு ஜோதிமயமான சிந்தனையாளன் தெய்வீக சத்தியத்திற்குக் கீழ்ப்படியும் கருவியாக அமையும். உலகம் என்பது உண்மையில் என்னஎன்பது அங்குத் தெரியும். நாம் முழுவதும் நம்மையறிவோம், பிறரையறிவோம், பிறரில் நம்மை அறிவோம். அனைத்தும் பிரபஞ்ச ஜீவனாக, ஒருமையின் பன்மையாக அறிவோம். நாம் வேறுஎன்ற கருத்து எல்லாத் தவற்றையும் ஏற்படுத்துவது. நாம் அதையிழந்து விடுகிறோம். அறியாமை உண்மையெனக் கொண்டதெல்லாம் உண்மையென அறிவோம். அதைச் சிதைந்த உண்மை, தவறாகப் புரிந்துகொண்ட உண்மை, பொய்யாக நினைத்தவையென அறிகிறோம். நாம் பிரிவினையைக் காண்கிறோம், ஜீவாத்மா பிரிந்து நிற்பதையறிகிறோம். என்றாலும், அவையென்ன, நாம் யார்என்பதை நாம் அறிவோம். அணுவாகப் பிரிந்ததையும் அறிவோம். நாமும், அவையும் யார்என்பதை அறிவோம். எனவே மனம் சத்தியம் - ஜீவியத்திற்கு உபகருவிஎன அறிவோம். மனத்திற்குச் சுய அனுபவம் உண்டு. தன் சுய அனுபவத்தில் அதன் தாயகத்தை விட்டுப் பிரிக்காவிட்டால், தனக்கென மனம் ஒரு வீடு அமைக்காவிட்டால், மௌனமானக் கருவியாகமட்டும் செயல்பட்டால், தன் ஆதாயத்திற்காகக் கிடைப்பதைச் சொந்தமாக்கிக் கொள்ள முயலாவிட்டால், மனம் தன் கடமையை ஒளிமயமாகப் பூர்த்தி செய்யும். மனத்திற்கு அளித்த கடமை தோற்றங்களைப் பிரித்து, பொதுவான பின்னணியில் அவை கலந்து குழப்பமடையாமல் இருக்க உதவுவது. அக்கடமையை மனம் சிறப்பாகச் செய்யும்.*

கல்லூரியில் ஆசிரியர்களிடம் மாணவர்கள் பாடம் படித்தால் அவர்களுக்குப் பல ஆசிரியர்கள் பல பாடம் நடத்துவார்கள். எந்த மாணவனும் ஓர் ஆசிரியருடைய சொந்த சொத்தல்லன்.

தன் மாணவன் அடுத்த ஆசிரியரிடம் நெருங்கிப் பழகினால் பொறாமைப்படும் ஆசிரியருண்டு. நாம் பல கடைகளில் பல பொருள்களை வாங்குகிறோம். கடைக்காரனுக்கு நாம் சொந்த உடமை இல்லை. 'ஏன் அடுத்த கடைக்குப் போனாய்?' என சண்டைக்கு வருபவர் உண்டு. டாக்டர், வக்கீல், நண்பர்கள், உறவினர்களுடன் இந்த இல்லாத உரிமை பொறாமையை எழுப்பி வேலையைக் கெடுக்கும்.

- ❀ கடமைகள் பிரியாமல் வேலை நடக்காது. அதற்காக ஏற்பட்டது மனம். கடமைகளைப் பிரிக்க ஏற்பட்ட மனம் மனிதர்களைப் பிரிக்க முயல்வது பிணக்கு ஏற்பட வழி.
- ❀ பிள்ளைகளை அடுத்தவரிடம் பழக அனுமதிக்காத பெற்றோருண்டு.

***மனம் சத்தியத்தை ஏற்று, பரமனின் பார்வைக்கேற்ப விநியோகம் செய்வது கடமை. ஜீவியம், ஆனந்தம், சக்தி, பொருட்கட்குத் தனித்தன்மையுண்டு. அவற்றிற்குரிய சக்தி, சத்தியம், ஆனந்தம் அவற்றின் பொதுத்தன்மையிலிருந்து எழுகிறது. ஒருமையில் பன்மையை பன்மையாகப் பிரித்து, ஒன்று மற்றதைச் சந்தித்து சந்தோஷம்பெற உதவுவது மனத்தின் கடமை.***

மொழி பொது. ஆனால் நாம் பேசுவது பிறர் பேசுவதிலிருந்து மாறுபட்டது. குரல் பொது. ஆனால் ஒவ்வொருவருக்கும் குரல் தனி. எல்லோர் குரலும் ஒரே மாதியாக இருந்தால் பேச்சு புரியாது. ருசி பொது. பழம், பால், தேன், அரிசி, சர்க்கரைக்கு ருசி வெவ்வேறு. **மாறுபடும் ருசியை ரசிப்பது லீலை.** நம் வாழ்வில் தோற்றம், ஜாடை, பார்வை, குரல், குணம், உடை, நடை, பாவனை ஆகிய அனைத்தும் ஒவ்வொருவருக்கும் மாறுவதால் வாழ்வு ருசிக்கிறது. அது லீலை. சர்க்கரையின் இனிப்பைப் பாலின் ருசியிலிருந்து பிரித்துக் காட்டுவது மனம். மனம்என்பது இல்லையெனில் சர்க்கரையும், பாலும் ஒரே ருசியாக இருக்கும். வாழ்வு சப்பென இருக்கும். எல்லாச் சொற்களுக்கும் ஒரே பொருளானால் நம் கருத்தைப் பிறருக்குக் கூற முடியாது.



- ❀ அம்சத்தைப் பிரிக்க ஏற்பட்ட மனம் அங்கத்தைப் பிரித்து, சொந்தம் கொண்டாடி, வாழ்வில் அறியாமையால் பிணக்கை ஏற்படுத்துகிறது.
- ❀ சர்க்கரை எனக்கு, வீட்டில் என்னைத் தவிர யாரும் சர்க்கரை சாப்பிடக் கூடாதுஎன ஒருவர் கூறுவது இல்லாத சண்டையை வளர்ப்பதாகும். மனம் அதுபோல் கட்சி கட்டுகிறது. நீ எனக்கு நண்பனானால் வேறு யாரிடமும் பேசக்கூடாதுஎன்பவர் அதைச் செய்கிறார்.
- ❀ தோற்றப் பிரிவால் வாழ்வின் இனிமையை உயர்த்த ஏற்பட்ட மனம் கிடைத்ததை தனக்கே உரிமை கொண்டாடும் பழக்கத்தால் இனிமையைக் கடுமையாக்குகிறது.

***நிலையான ஐக்கியம் கலந்து வரும்பொழுது ஏற்படும் ஆனந்தம் வாழ்வின் ஆனந்தம். அங்கு பிரித்து, இணைவதால் ஏற்படும் இன்பத்திற்காக ஏற்படுத்தப்பட்டது மனம். பரமாத்மா ஜீவாத்மாவாக இதர ஜீவாத்மாக்களுடன் பழகுவதை மனம் ஏற்படுத்த வேண்டும். தன் ஐக்கியத்தை இழக்காமல் இதர ஜீவாத்மாக்களுடன் அவர்போல நடக்கும் திறமை பரமாத்மாவுக்குண்டு. அதுவே உலகம்.***

தலைவர் தலைமையை இழக்காமல் ஒவ்வொரு தொண்டருடனும் தொண்டராகப் பழகும்தன்மை மனம் கொடுத்த பரிசு. அது தொண்டருள் அதிக ஒற்றுமையை ஏற்படுத்தும். தொண்டர் கட்சி கட்டுவது விலகும்.

***பிரக்ஞாவின் செயல் முடியுமிடம் மனம். இதனால் உறவு வளர்ந்து சிறக்கும். அறியாமைஎன நாம் அறிவது புதியதாக எதையும் ஏற்படுத்தவில்லை. முழுப்பொய்யை உற்பத்தி செய்யவில்லை. மெய்யை நமக்குத் தவறாகக் காட்டுகிறது. ஞானத்திற்கு ஆரம்பம் உண்டு. அத்தொடர்பை விலக்குவது அறியாமை. அது எதிரிஎன்ற தோற்றத்தையும், பிணக்கையும் பிரபஞ்ச லீலையில் புகுத்துவது அறியாமை.***

ஆபீஸ், வீடு, ஸ்தாபனங்களில் அனைவரும் உள்ள கடமைகளைப் பிரித்துச் செய்யும்பொழுது ஒற்றுமை துலங்கும். பொறாமை இருளை வளர்க்கும். கடமைகளைப் பிரிக்க ஏற்பட்ட மனம் மனிதர்களைப் பிரிப்பது அறியாமை.

பக்கம் 171 / பாரா 18

*மனம் தன் சுய ஞானத்திலிருந்து விலகியது மனத்தின் அடிப்படையான தவறு. ஜீவாத்மா உண்மையில் பிரபஞ்சத்தின் ஒரு மையம். ஒரு செறிந்த மையம். அது ஒருமையின் ஒரு ரூபம். அதற்குப் பதிலாக ஜீவாத்மா தன்னை தனித்த விஷயமாகக் கருதுவது, அதன் அடிப்படையில் தன்னையே தன் லோகத்தின் மையமாகக் கருதுவது தவறு. இதுவே தவற்றுக்கு ஆரம்பம். அதிலிருந்து எல்லா அறியாமைகளும், இதரச் சிறுமைகளும் பலனாக வருகின்றன. வாழ்வுஎன்பது ஆற்றோட்டம். தன்னுள் அது ஓடுவதைமட்டும் மனம் அறிகிறது. அதனால் ஜீவனுக்கு அளவேற்படுகிறது. அதனினின்று ஜீவியத்திற்கு எல்லை ஏற்படுகிறது. அதன்மூலம் அறிவுக்கும், செயலுக்கும், திறனுக்கும், சுய அனுபவத்திற்கும், ஆனந்தத்திற்கும் அளவு, லிமிட் ஏற்படுகிறது. பொருள்களையும், நிகழ்ச்சிகளையும் தான் கண்டவாறு காண்பதால், மனம் இதர விஷயங்களையறிய முடிவதில்லை. அதனால் தனக்குத் தெரிந்தவற்றையும் மனத்தால் அறிய முடியவில்லை. எல்லா ஜீவன்களும் ஒன்றையொன்று நம்பியுள்ளது. அதனால் முழுமையை அறிவது உண்மையை அறிய உதவும். சாரத்தையறிவதும் உண்மையை அறிய உதவும். அதேபோல் நம் மன உறுதி, இறைவனின் திருவுள்ளத்தை அறியவில்லைஎன்பதால் தவறாகச் செயல்படுகிறது. இயலாமை, முடியாமை ஓரளவில் எழுகிறது. நம் ஆத்மாவின் சுய ஆனந்தம், பொருள்களை அனுபவிப்பது, இறைவனின் ஆனந்தத்திலிருந்து பிரிவதால், செயலாலும், அறிவாலும் குறையேற்பட்டு உலகையாளும் திறனை இழக்கிறது. கண்டதைச் சொந்தமாகப்பெற முயன்று, பெற்றதைச் சுயநலமாக அனுபவிக்க முயல்வதால் வேதனை எழுகிறது. தன்னையறியாதது எல்லா குதர்க்கத்திற்கும் அடிப்படை. அது அகந்தையால் ஆதரிக்கப்பட்டு வலுவடைகிறது.*

பக்கம் 172 / பாரா 19

*இருப்பினும் எல்லா அறியாமையும், குதர்க்கமும் சத்தியம் சிதைவதால் ஏற்படுவதே தவிர பொய்மையின் முழுமையால் ஏற்படவில்லை. அவித்யாயம் அந்த்தரே, மனம் பொருள்களைப் பிரித்துப் பார்ப்பதால் ஏற்படும் பலன் இது. சச்சிதானந்த சத்தியம் லீலையில் தோற்றமாக மாறுவதால் பிரிவினை கருவியாகிறதுஎன்பதை மறந்துவிடுகிறோம். தானிழந்த சத்தியத்தின் எல்லையை மனம் மீண்டும் அடைந்தால் அது பிரக்ஞாவின் செயலில் முடிவையடையும். அப்படி ஏற்படும் தொடர்பான உறவுகள் ஒளிமயமான திறனுடையதாக இருக்கும், குதர்க்கமானதாக இருக்காது. அது நேரானது, வேதம் கூறும் கோணலன்று. சத்தியம் என்பது இறைவன் தன் ஜீவியத்தில் சுமுகமாகச் செயலாகவும், ஆனந்தமாகவும் அசைவது. தற்சமயம் நாம் காண்பது மனம் முன்னும் பின்னுமாகச் செல்லும் அசைவுகள் வளைந்து உடைந்தவை. இவை தன்னை மறந்த ஆத்மாவின் நெளிவு சுளிவுகள். ஆத்மா தன்னையறிந்து, தன் தவறுகளினின்று விலகுவது சத்தியம். நாம் சரி, தவறுஎனக் கொள்பவை சத்தியத்திற்கு அளவிட்டு, சிதற அடிக்கிறது. இவை மாறினால் இயலாமை வலிமையாகும், வேதனை இன்பமாகும். உணர்ச்சி தன்னையறியும் போராட்டம் வேதனையை எழுப்புகிறது. மரணம் மரணமிலா வாழ்வாக மாறும். அப்பொழுது நம் வாழ்வும், மரணமும் மீண்டும் சத்தியத்தையடையும் முயற்சியாகும்.*

**159/1 :** பூவுலகில் தெய்வீக வாழ்வு சாத்தியமா என்ற ஐயம் எழுகிறது.

**159/2 :** நம்மை உயர்த்த வேண்டும் அல்லது நம் வாழ்வுடன் பெரியதைப் பரிமாறிக்கொள்ள வேண்டும்.

**160/3 :** மனம், உயிர், உடல் ஆகியவை அறியாமையால் அவற்றின் மூல சத்தியத்தினின்று பிரிக்கப்பட்டன.

**161/5 :** இலட்சிய மனம் மேலுலகில் உள்ளது. இல்லாவிட்டால் நாம் அதை உற்பத்தி செய்வோம்.

**161/5 :** மனம் பகுதியை அறியும். அனந்தத்தை அறிய மனம் மேலே செல்ல வேண்டும்.

**162/4 :** அகத்திற்குரிய வெற்றியைப் பெற்றவர் அதிகம். புறம் வெல்லப்படவில்லை.

**163/7 :** மனம் உபஉபாயம். இது தெய்வீகமனம். இனி தனிப்பட்ட உபாயமன்று.

**164/8 :** பிரக்ஞா புருஷப் பிரகிருதியைப் பிரிக்கிறது.

**165/9 :** புருஷன் ஒவ்வோர் ஆத்மாவிலும் தன்னைக் கண்டு, தன் ஐக்கியத்தை இழக்க மறுக்கிறான்.

**165/10 :** மனம் துண்டாடுவது தொடர்ந்தாலும், மனம் தன் அடிப்படையான ஐக்கியத்தை இழப்பதில்லை.

**166/11 :** மனம் தன்னை தன் வேலையிலிழப்பதால், அவித்தை உற்பத்தி ஆகிறது.

**166/12 :** துண்டாடுவது சூன்யத்தில் முடிகிறது. அது சத்தியஜீவிய நிலை.

**167/13 :** தன்னை மறந்து தன்னுடனும், வாழ்வுடனும் ஐக்கியமாவதால் அவித்தை உண்டாகிறது.

**168/14 :** உடலோடு ஐக்கியமாவதால் அஞ்ஞானம் ஆழ்ந்து வளர்கிறது. அதிலிருந்து விடுதலை பெற்றால் பிராணமயப் புருஷன் வெளிவரும்.

**169/15 :** பிராணமயப் புருஷன் நம்மை மனமும் சத்தியஜீவியமும் சந்திக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்லாது.

**169/16 :** அதற்கடுத்தாற் போலுள்ளது மனோமயப் புருஷன். அது நம் ஆத்மா இல்லை. மனம் செய்யும் தவற்றை அதுவும் செய்யும். சத்தியஜீவியத்திற்கும் மனத்திற்கும் இடையேயுள்ள திரையை அதனால் கிழிக்க முடியாது.

**170/17 :** திரையைக் கிழித்து, அறிவை விட்டகன்று, சத்தியத்தைக் காணலாம்.

**171/18 :** சுய ஞானத்திலிருந்து நகர்ந்தால் சுய அறியாமை எழும். அதுவே குதர்க்கத்தின் வேர்.

**172/19 :** அறியாமை மனத்தைச் சிதறடிப்பதால் மனம் கோணலாகிறது - அது வேதம் கூறியது.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சத்தியம் (existence) விளக்கம் பெற்றால் (when comprehends) ஜீவனுள்ள எண்ணம் (Real Idea) தோன்றும். இவ்விளக்கத்தை நாடாவிட்டால் உணர்வு ஆனந்தமாக நின்றுவிடும். தன்னறிவு (self-awareness) ஜீவியமாகவே இருக்கும்.

*தன்னையறிந்த ஜீவியத்தை விளக்கம்*
*ஜீவனுள்ள எண்ணமாக மாற்றுகிறது.*

*தன்னையறிந்தவன் சிருஷ்டிக்கர்த்தா.*



## இம்மாதச் செய்தி

**சத்தியம்**

**பிரியத்தை**

**இனிமையாக்கும்.**

# அன்பர் கடிதம்

*ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய நம:*
*ஸ்ரீ அன்னையே நம:*

அன்புள்ள அன்னையின் பக்தர்களே, உங்களுடன் நான் பகிர்ந்துகொள்ள ஒரு இனிய சம்பவம் அன்னையினால் நடைபெற்றது. 12-12-2005 அன்று நான் பெங்களூருவில் உள்ள ராணுவ ஆஸ்பத்திரியில் பிழைப்புக்கும் சாவுக்கும் நடுவில் போராடி தத்தளித்துக் கொண்டிருந்தேன். டாக்டர்கள் என்னை அன்றைய தினம் ஆபரேஷன் செய்வதற்குச் சற்று நேரத்திற்குமுன்பு நான் படுத்திருந்த படுக்கை தலையணை அருகில் அன்னையைக் கண்டேன். அவர் என் தலையைத் தம்முடைய திருக்கரங்களால் ஸ்பர்சித்து "எதற்கும் பயப்பட வேண்டாம்" என்று ஆசீர்வதித்து, "எல்லாம் நல்லபடியாக முடியும்" என்று கூறி மறைந்தார். நான் அந்த வலியினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த நோயினால் என் உடம்பில் விஷம் ஏறி, ரத்தத்தில் கலந்து, Pneumoniaவுக்கு திரும்பிவிட்டது. எனக்கு 24 மணி நேரம் dead lineஐ டாக்டர்கள் விதித்திருந்தனர். இதனால் ஆபரேஷன் நேர்ந்தது. ஆபரேஷனுக்குப் பின்பு 3 நாட்கள் அவசரச் சிகிச்சைப் பிரிவில் அட்மிட் செய்யப்பட்டிருந்தேன். ஆனால் என் பாக்கியத்தை என்னவென்று சொல்ல முடியும்! ஏனென்றால், ஜுலை 2005இல் பாண்டிச்சேரியில் அன்னையின் தரிசனம் முடித்து வந்திருந்தேன். அதன் பிறகுதான் மேற்கண்ட விஷயங்கள் நிகழ்ந்தன. அன்னை எப்பொழுது தம் திருக்கர ஸ்பர்சத்தினால் என்னை ஆசீர்வாதம் செய்தார்களோ, அதன் பிறகு எனக்கு ஆபரேஷனில் எவ்வித கோளாறுமின்றி இந்த அபாயகரமான நோயிலிருந்து மீட்கப்பட்டேன். இந்த அனுபவங்களை பக்தர்களுடன் பகிர்ந்துகொள்ள எனக்கு மிகவும் ஆனந்தமாக இருக்கிறது. நான் அன்னைக்கு எவ்வித சேவையும் செலுத்தியதாக ஞாபகம் இல்லை. ஆனால் வியாதியினால் ஆபரேஷன் செய்யப்பட்டு கிடந்த நான் அன்னையின் அருளாலும், அன்பாலும் மறுபிறப்பு எடுத்தேன்.

- K.V. *மரகதவல்லி, பெங்களூரு*

❀ ❀ ❀



# அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**பிறர் வாழ விரும்புவது நல்லெண்ணம்**

மாமாவுக்குப் பையன் நமஸ்காரம் செய்தான். "நான் ஆசீர்வாதம் செய்து, நீ பெரிய மனுஷனாகிவிட்டால், என்ன செய்வது? என் ஆசீர்வாதம் பலித்துவிட்டால் ஆபத்தாயிற்றே?" என்றார் மாமா. அவர் விளையாட்டாகச் சொன்னார். பையன் பெரிய இடத்திற்கு வந்துவிட்டான். *தமாஷான குதர்க்கத்தின்பின் நல்லெண்ணம் இருந்ததால்தான் இன்று பையன் வசதியாக இருக்கிறான்.* ஹாஸ்யமான சொல்லானாலும் மக்கள் மனநிலையை இது காட்டுகிறது.

***அதனால் உளமார வாழ்த்துவது உயர்ந்தது.***

உழவன் அடுத்தவன் உண்பதைப் பொறுத்துக் கொள்வான், உழுவதைப் பொறுத்துக்கொள்ள மாட்டான்என்பது சுபாவத்தை விளக்கும் சொல்.

ராமநாதன் தன்னால் ஜெயிக்க முடியாத South Indian Tennis Tournamentஐத் தம் மகன் கிருஷ்ணன் ஜெயிக்க வேண்டுமென வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார். ICSஇல் 8 பேர் எடுக்கும் நாளில் 8ஆம் நபராக வந்தவர் மார்க்கை 9ஆம் நபருக்குப் போட்டு அவரை எடுத்தனர். அவர் கல்லூரி ஆசிரியரானார். தாம் பெறாத ICSஐத் தம் மகன் பெற அவர் சிறுவயதிலிருந்து முயன்றதால் IASஇல் அவன் உயர்ந்த ராங்க் வாங்கினான். பெற்றோர் தம் மக்கள் தங்களைவிட உயர்ந்தவராகவரப் பிரியப்படுபவர். இது இயல்பு. பெரும்பாலும் உண்மை. அடுத்த பக்கம் உண்டு.

✡ தம்மைவிட மகன் புத்திசாலியாக இருப்பதால் பொறாமைப்படும் பெற்றோரும் உண்டு.

✡ மகள் தம்மைவிட அழகானால் பொறுக்காத தாயாருண்டு.

✡ யாதவப் பிரகாசருக்கு தம் சிஷ்யன் பிரபலம் பொறுக்கவில்லை.

இவையும் உலகில் உலவும் நடைமுறை. நமக்கு அக்குணம் இல்லாவிட்டாலும், உள்ளே புதைந்திருக்கும். அதற்கு மாற்றுசெய்வது பெரும்பலன் தரும்.

✡ மனிதனால் பிறருடைய திறமையை ஏற்க முடியாது.

✡ அதை ஏற்பவராலும் பிறர் நல்ல குணத்தை ஏற்க முடியாது.

**நல்லெண்ணத்தின் பவரை உயர்த்த நாம் செய்ய வேண்டியது:**

✡ நம் உறவினர், நண்பர்கள், குறிப்பாக நெருக்கமானவர்கள், மேலே உள்ளவர், கீழே வேலை செய்பவர்கள் 15 அல்லது 20 அல்லது 50 பேரைப் பட்டியலாக எடுத்து, நிதானமாக அவர்களுக்குள்ள திறமைகளை ஆராய்ந்து மனத்தை ஏற்கும்படிச் செய்ய வேண்டும். அதைப் பாராட்டிப் பேச வேண்டும். அவரிடமே சந்தர்ப்பம் வரும் பொழுது சொல்ல வேண்டும். *அவரைப் பாராட்டும்பொழுது நம் மனம் சந்தோஷப்படுவது, நிறைவது நம் உணர்வு உண்மையானதுஎனக் காட்டும்.*

✡ அதேபோல் இவர்கள் எந்த விஷயத்தில் நல்லவர்கள், எந்த அளவு நல்லவர் என்பதைத் துல்லியமாகக் கணித்து, மனம் ஏற்க வேண்டும். அவர் திறமையை ஏற்பதைவிட நல்லவர்என ஏற்பது சிரமம். அதை வெளியில் பேச வேண்டும். அவரிடமே சொல்ல வேண்டும்.

❀ **நல்லெண்ணம் பிறர் வாழ்வு செழிக்கச் செய்யும்.**

❀ **பிறர் திறமையைப் பாராட்டுவது மனம் விசாலமடையும்.**

❀ **பிறர் நல்ல குணத்தை அவரிடமே பாராட்டிப் பேசுவது மனமும், உணர்வும் பவித்திரமாகப் பக்குவம் அடைந்ததைக் காட்டும்.**

***பிறர் பெருமை நம் மனத்திற்குத் தரும் நிறைவு***
***ஆன்மீக அதிர்ஷ்டமாகும்.***



**நிதானம் தேவை. யோகத்தை அளவோடு ஏற்க வேண்டும்.**
**(Find the balance)**

✡ பகவான் ஸ்ரீ அரவிந்தர் பிறந்தபொழுது அவர் தாயார் ஸ்வாதீனம் இழந்தார்.

இலண்டனிலிருந்து வரும் செய்தி தவறாக வந்து, தகப்பனார் மாரடைப்பால் இறந்தார். (பிள்ளைகள் பயணம் செய்யும் கப்பல் மூழ்கியதுஎன்ற தவறான செய்தி வந்தது).

பகவான் மனைவி பாண்டிச்சேரிக்குப் புறப்பட்டு வரும்வழியில் நோயுற்று இறந்தார்.

ஏன் அவதாரப் புருஷருக்கு இந்த நிலையென நாம் கருத வேண்டும். இலட்சிய ஆர்வத்தில் நாம் யோகத்தை அளவுக்கு மீறி ஏற்றால் வாழ்வு கடுமையாகும்என்பது சட்டம். (நாம் நம் நிலையை பகவானுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது, பார்க்கக்கூடாது).

நடந்தன எல்லாம் நல்லனவே. நல்லது மட்டுமே என்றால், எப்படி இது போன்ற நிகழ்ச்சிகளைப் புரிந்து கொள்வது?

1) **நமக்கு நல்லது குழந்தைக்குக் கசப்பு.**
2) **சட்டத்தில் நல்லது நியாயத்திற்குத் தவறு.**
3) **தவற்றை நல்லதாக அறியும் ஞானம் விவேகம்.**
4) **பிள்ளையைக் கறி சமைப்பது பிள்ளைக்கு மோட்சம்என்பது ஆன்மீக ஞானம்.**
5) **ஸ்ரீ அரவிந்தம் அதையும் கடந்தது.**
6) **இறைவன் செயலை முகமலர்ச்சியுடன் ஏற்றுப் போற்றுவது ஸ்ரீ அரவிந்த ஞானம்.**

✡ **மனம் செயல்படக் கூடாது – அறிவை நம்பாதே, ஆன்மாவை நம்பு.**

✡ **உணர்ச்சி எழுவது பாவம் மட்டுமன்று; மட்டம்.**

✡ **செயலை நாடுவது தோல்வி.**

✡ **மனம் அமைதியாக, உணர்ச்சி உயர்வாக, தானே எழும் செயல் இறைவன் செயல் – உடல் புளகாங்கிதம் பெறும்.**

✡ **அது சமர்ப்பணம்.**

✡ எல்லோரிடமும், ஒருவர் தவறாமல், நல்ல பெயர் வாங்க முடியாதவர் எதற்கும் பயன்படமாட்டார். தேறச் (pass) செய்ய எதிரி வாயால் புகழ் எழ வேண்டும். இது குறைந்தபட்ச தகுதி.

**மனம் குறையை மறக்க வேண்டும்.**

**குறையிருந்தால் மதரில்லை.**

**எண்ணத்திலேயே குறை எழக்கூடாது. இது அவசியம்.**

**குறை எழுந்தால் சமர்ப்பணம் செய்ய வேண்டும்.**

**நமக்கு எவரும் கணக்கில்லை, நாம்மட்டுமே கணக்கு.**

**டி.வி. பார்ப்பது மனம் தாழ்வது.**

**நல்ல புரோகிராம் பார்க்கலாம், மட்டமானவற்றைத் தவிர்க்க வேண்டும்.**

**சிறப்பான சிந்தனையும் சிந்தனைஎன்பதால் கூடாது.**

✡ நெருக்கமான இருவர், மிக நெருங்கியவர்கள் (தம்பதி; உடன் பிறந்தவர், பெற்றோர், பிள்ளைகள்) ஒருவர் அடுத்தவருக்கு மேற்கூறிய மனப்பான்மையில் சொல்லக்கூடியது:

"உங்களைவிட எனக்குச் சிறந்தவரை நான் சந்தித்ததில்லை. நீங்களே எனக்கு எல்லாம். நாம் நெருங்கிவரச் சில ஆண்டுகளாயின. இப்பொழுது நீங்களே எனக்கு அன்னையென நானறிய பல ஆண்டுகளாயின. அது உங்கள் ஆன்மீகப் பெருமை. என் இதயத்தை முழுவதும் திறக்கக்கூடியவர் ஒருவரே. அவர் நீங்கள்தாம். நீங்களே என் உணர்வு மையம். எனக்குக் கவசமாக நீங்கள் அமைய வேண்டும். நீங்களே என் ஆவித்துணை. அது அன்னை பக்தி. உங்களை அன்னையாக நான் காண வேண்டும். இது நடக்க வேண்டும். உங்கள் எண்ணம் என் வாழ்வில் பலிக்கும்".

## வேத வாக்கு

வெறும் பேச்சையும் வேத வாக்காக எடுத்துக் கொள்ள வேண்டும்.

அன்னை சொல், ஸ்ரீ அரவிந்தர் சொல் வேதம்.

"மனைவிக்குச் சரணடையாமல் மனம் மலராது.

அவள் தாளினை கைக்கொண்டு மகிழ்ந்திருப்பான்.



யோகம் அவனுக்கு அவளில் பூர்த்தியாகும்" என்பது ஸ்ரீ அரவிந்தம்.

அனைவரும் பாராட்ட வானை எட்டும் அளவு உயர வேண்டும்.

வலிமையைக் கேட்டால், கிடைக்கும்.

மனம் அடங்கினால், கேட்டனவெல்லாம் கிடைக்கும்.

மனம் அழிந்தால், கேட்காதனவெல்லாம் கிடைக்கும்.

மனம் உயர்வது உடல் ஆரோக்கியத்தில் தெரியும்.

இந்த மனநிலையில் நினைவே பிரார்த்தனை.

பிரார்த்தனை - உடனே பலிக்கும்.

5 வருஷ வியாதி 5 நாளில் போகும்.

சொல்வதற்கு ஒன்றுமில்லை - செய்வதற்கு ஏராளமாக இருக்கின்றன.

*அன்னையை அறிந்தது அதிர்ஷ்டம், அருள்.*

*அதற்கேற்ப நடக்க வேண்டும்.*

"உன்னை நினைத்ததைப்போல் அன்னையை நினைத்தால் யோகம் சித்திக்கும்" என உணரும் மனைவி, கணவன்மார் ஏராளமாக உண்டு.

என் மனம் ஒரு முறை திறந்தது.

இதுவே சட்டம்.

"என் உணர்வு உன்னில் பூர்த்தியாக வேண்டும்" என நினைக்கும் தம்பதிகள் உண்டு.

"என் உணர்வையும் பூரணமாக ஏற்பது நல்லது".

மனித இதயம் எளிதில் திறந்து மலர்வதில்லை.

"எனக்கு அன்புதவிர வேறெதுவும் தெரியாது.

என் இதயத்தைத் திறந்து அங்கே நிலையாக வாசம் செய்.

உன் மூலமாக நான் அன்னையை அடைகிறேன்" என்பது ஆர்வமுள்ள தம்பதியின் குரல்.

அன்பு தூய்மையானால் அது விஷத்தையும் அமிர்தமாக்கும்.

அமிர்தமான அன்பு அன்னையின் அருளின் அற்புதம்.

அன்பு உற்பத்தியானால் நெஞ்சு வெடித்துவிடும்.

வெடிக்கும் நிலைக்கு வந்த நெஞ்சு நிறைந்து நிலைக்க வேண்டும்.

நினைவு நிறைவு.

நினைவிருந்தால் நெஞ்சு ஆலயம்.

நிலையான காதலை நிதர்சனமாக்குவது அன்னையின் அருள்.

அன்பு என்பது சிரிப்பின் மலர்ச்சி.

*அன்புக்கு அறிவு வந்தால் அதற்கு இனிமைஎனப் பெயர்.*

**பிள்ளைகட்குச் செல்வம்தரப் பிரியப்படுகிறோம்**

✡ பில்கேட்ஸ் உலகிலேயே முதன்மையான பணக்காரர்.

(\$70 பில்லியன் சம்பாதித்துவிட்டார், ரூ.280,000 கோடி).

அவர் பிள்ளைகளுக்குப் அப்பணம் நல்லது செய்யாதுஎன தர்மத்திற்குத் தம் செல்வத்தைக் கொடுத்துவிட்டு, பிள்ளைகட்கு \$300 மில்லியன் - ரூ.1,200 கோடி - கொடுத்தார். அமெரிக்காவில் பெரும் பணக்காரர்கள் தங்கள் பிள்ளைகட்குச் சிறிது பணம் கொடுத்துவிட்டு, மீதியை தர்மத்திற்குக் கொடுக்கும் வழக்கம் ஆரம்பமாகியிருக்கிறது.

- ❀ *பணம் தர முடியும்.*
- ❀ *பண்பு தர முடியாது.*
- ❀ *பண்பில்லாமல் பணம் நல்லது செய்யாது.*
- ❀ *செல்வம் தரலாம், திறமை (character) தரமுடியாது.*
- ❀ *திறமை (character) தந்தாலும், பண்பு (values) தரமுடியாது.*
- ❀ *அன்னை (Mother) மேலே நம்பிக்கை தரமுடியுமா?*
  *மதர் தருவது மற்றவர் தரமுடியாது.*
  *இது யதார்த்தமாகுமா?*

தத்துவம் பணத்தைவிடப் பெரிய கருவியென பிரபல ஆசிரியர் டிரக்கர் கூறுகிறார்.

யதார்த்தத்தைவிடப் பெரிய இலட்சியம் - உலகப் போரில் ஹிட்லர் செக்கோஸ்லவேக்கியாவை ஆக்ரமித்தபொழுது பாட்டா கம்பனியை எடுத்துக் கொண்டான். அதுவே பாட்டா கம்பனியின் தலைமை ஆபீஸ். அதன் பெரிய ஆபீஸர்கள் தப்பி ஓடி இலண்டனில் சந்தித்தனர்.



“கம்பனி போனால் எல்லாம் போகாது. ஆபீஸர்களிருக்கிறோம். மீண்டும் கம்பனியை நாம் ஆரம்பிக்கலாம்” என்றனர். கனடாவில் ஆரம்பித்து மீண்டும் பழைய நிலைக்கு வந்துவிட்டது.

- ❀ *கம்பனியின் முதல் பணமில்லை.*
  *திறமைபெற்ற (executives) அதிகாரிகள்.*
- ❀ *திறமை பணத்தைவிடப் பெரியது.*
- ❀ *பண்பு திறமையைவிட உயர்ந்தது.*
- ❀ *அவல் கொடுக்காமல், அதிர்ஷ்டம் வாராதுஎன்பது குசேலருடைய அனுபவம். வால்டர் காணிக்கை தர மறுத்தார். திட்டம் (project) ரத்தாயிற்று. போர் முதலியார் தர மறுத்து, பிறகு காணிக்கை கொடுத்துப் பலன் பெற்றார். திருடனுக்கு அனுக்கிரஹம் செய்ய காணிக்கையைத் திருட வேண்டும்.*

தெய்வம் பக்தனுக்கு காணிக்கை தரும் நேரமும் உண்டு. அன்பர் அன்னைக்கு 1970இல் 3 இலட்ச ரூபாய்தர முடிவுசெய்து ஒரு திட்டத்தை ஆரம்பித்தார். 1972இல் அன்னை அவருக்கு 2 இலட்சம் கொடுத்தார். மேலும் 1¼ இலட்சமும் வந்தது. அந்த காணிக்கை கருணையாகவுமிருக்கும், கடுமையாகவுமிருக்கும்.

*தொடரும்....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆசைக்கு அறிவை உணர்த்த முயல்வது அறியாமையாகும். இன்று வரும் நஷ்டம் நாளைய இலாபத்தைக் கொண்டு வரும் என விளக்குவது போலாகும் அது. அதிகாரம் செய்யும் மனைவிக்கு அறிவுக்குரிய விளக்கமளிப்பது போலாகும்.

***அதிகாரம் செய்யும் மனைவிக்கு அறிவுக்குரிய விளக்கமில்லை.***

## P.100 An atavism of higher births is hers

### உயர்ந்த பிறப்பின் உயிரோட்டமான சுபாவம்

- ✡ அழிந்த நினைவுகள் ஆழ்ந்த நித்திரையைக் கலைத்தன.
- ✡ இழந்த லோகங்களை அழைத்தெழுந்தன.
- ✡ மார்பகம் மறக்காத சக்திகள் அசைந்தன.
- ✡ வளரும் பெருவிதியின் வளமான உறவுகள்,
- ✡ அழியாத வாழ்வை அடைந்தன மீண்டும்.
- ✡ பிறப்பையும் இறப்பையும் பிரித்தெடுக்க இசைந்தன.
- ✡ முழுமையின் மின்னலைப் பெற்றுச் செயல்படும்,
- ✡ கபோதியின் உழைப்பு கடுமையிழந்து அமைதியுற,
- ✡ மலையிலெடுத்த சிறுகல்என்ற பிம்பம்,
- ✡ அமைதியான ஜோதியின் அரவணைப்பின் அகம்,
- ✡ ஆண்டவன் ஏற்ற அலுவல்; குருட்டுப் பார்வைக்குரிய கலங்கரை விளக்கம்.
- ✡ உலகையாள எடுத்து வைத்த சிறுஅடி,
- ✡ முடவனின் முயற்சி, அரைகுறையான வேலை, அனைத்துலக வாழ்வு,
- ✡ மறைந்த மகிமையை மாற்றும் ஐயங்கள்.
- ✡ உயர்ந்த இலட்சியங்களை உற்று நோக்காத ஆரம்பம்,
- ✡ பெருமையின் ஆரம்பம் பெற்ற பேற்றின் நடுக்கம்,
- ✡ விவரமற்ற விஷயம் விறுவிறுப்பாக சந்தித்து,
- ✡ ஆயிரம் வண்ணங்கள் அழிந்தெழும் ஐக்கியம்,
- ✡ அறிவைக் கேலி செய்யும் கலைஞனின் களிப்பு,
- ✡ இறைவனின் இதயம் எட்டிப் பார்க்கும் எழில்,



- ✡ ஞானத்தின் தெளிவை ஞாபகப்படுத்தும் யுக்தி.
- ✡ பல லோகங்கள் பங்கு கொள்ளும் சித்திரத்தின் திரை,
- ✡ தெய்வம் தந்த பளிங்கு யோகம் தந்த யந்திரம்.
- ✡ இயற்கையின் அஞ்ஞானத்திரையின்பின் மலர்ந்த மனம்,
- ✡ பரந்த ஜடத்தின் இடம் நிரப்பிய பார்வையுள்ள பரப்பு.
- ✡ லேசான கீறலான ஆத்மா நெளிந்து நகரும் வண்ணம்,
- ✡ காலத்தின் பின்னணிக்குரிய நிலைபெற்ற கால்கள்.
- ✡ அனந்தம் சுருங்கிய அழகின் பிரகாசம்,
- ✡ உலகை உட்கொள்ளும் கடுகெனும் கற்கள்,
- ✡ பிரபஞ்ச புதிரின் விளக்கமான பாதை.
- ✡ அவலமான அடித்தளம் ஆரம்பமாக நடந்தது.
- ✡ சூன்யம், இரகஸ்யமான முழுமையின் துவாரமான வாயில்,
- ✡ அனந்தம் அழிந்தெழுந்த பூஜ்யத்தின் திரள்,
- ✡ முழுமையும், முழுஅழிவும் ஒன்றென எழுந்த பாங்கு,
- ✡ என்றும் இல்லையெனும் இல்லாத ஆடை.

❀ ❀ ❀

### அறிவிப்பு

ஓர் அன்பர் சொஸைட்டி நூல்கள் கடினமாக இருப்பதால் புது அன்பர்கள் படிப்பதை நிறுத்திவிடுகிறார்கள் என எழுதுகிறார். சில ஆண்டுகளுக்கு முன் அன்பர்களை மலர்ந்த ஜீவியத்தில் எழுத அழைத்தேன். எவரும் முன்வரவில்லை. அனுபவமுள்ள அன்பர்கள் நூல் எழுதினால் வெளியிட நான் விரும்புகிறேன். தலைப்பு, outline வேண்டுமெனினும் கேட்பவர்கட்கு அனுப்பலாம்.

கர்மயோகி

# நேரம் வந்துவிட்டது

என். அசோகன்

ஒரு நாடு அல்லது குடும்பத்தை உயர்த்துவதற்கும் மற்றும் நஷ்டத்தில் ஓடிக்கொண்டு இருக்கும் கம்பனியை லாபகரமாக மாற்றுவதற்கும் மனிதர்கள் பெருமுயற்சி எடுக்கிறார்கள். சில சமயங்களில் அம்முயற்சிகள் கூடி வருகின்றன. கூடி வாராதபோது, ''நேரம் இன்னமும் வரவில்லை'' என்று சொல்லிக் கொள்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையைப் பற்றிய ஆன்மீக உண்மை என்னவென்றால் நேரத்தை மனிதன் வரவழைக்கலாம் என்பதுதான். அத்தகைய நேரம் இப்பொழுது வந்திருக்கிறது. இக்கருத்து மனிதனுக்குப் பழக்கமான ஒன்று இல்லையென்றாலும் இதனை விளக்குவது சிரமமில்லை. ஏனென்றால் இம்மாதிரியான நிகழ்ச்சிகள் நம்மைச் சுற்றி உலகெங்கிலும் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன. எளிமையாகச் சொல்லப்போனால்,

✡ அறிவிலிருந்து செயல்படும்பொழுது நேரம் வரும்வரை மனிதன் காத்திருக்கிறான்.

✡ ஆன்மாவிலிருந்து செயல்படும்பொழுது அதே நேரத்தை மனிதன் வரவழைக்கிறான்.

இதைப் படிக்கும் யாரேனும், ''நான் மிகவும் நொந்து போயிருக்கிறேன். இப்படி நேரத்தை வரவழைக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறேன். மேற்சொன்ன கருத்துகள் எனக்குச் சிறிது நம்பிக்கையூட்டுகின்றன. இக்கருத்தை எனக்குப் புரியும்படிச் சொல்ல முடியுமா?'' என்று கேட்கலாம். அதாவது, ''நடைமுறையில் நான் இருக்கும் சூழ்நிலையில் எனக்கு வேண்டிய நேரத்தைக் கொண்டு வர என்ன செய்ய வேண்டும்என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்'' என்று சொல்லலாம். இதற்கு உடனடிப் பதில் என்னவென்றால், 'இக்கருத்து உங்களுக்குப் புரிந்து, இதன் பின்னிருக்கும் உண்மையை நீங்கள் நம்புகிறீர்கள்என்றால், உங்களுடைய கடினமான சூழ்நிலை உடனே கடினம் குறைந்து நிலைமை முன்னேறுவதைப் பார்ப்பீர்கள்'.



இக்கருத்தை விளக்க உண்மையான உதாரணம் தேவைதான். இத்தகைய உதாரணம் positive விளைவுகளுக்கான வாய்ப்புகள் இருப்பதைக் காட்டும். மற்றவர்களுடைய அனுபவத்தில் இது உண்மை என்று பார்க்கும்பொழுது துளிர்விட்டிருக்கும் சிறிதளவு நம்பிக்கை வளர ஆரம்பித்து, நிலைமை மேலும்மேலும் முன்னேறும். பலன் எப்படிக் கிடைத்ததுஎன்பதற்கான விளக்கமும் உதவியாக இருக்கும். ஏனென்றால் அது நம் அறிவைத் தெளிவுபடுத்தும். மேலும் ஒரு விஷயம் தேவைப்படுகிறது. இதை நம் வாழ்க்கையிலும் செய்து காட்டவேண்டும் என்ற எழுச்சி நமக்கு வரவேண்டும். அவ்வெழுச்சி விளக்கம் தரும் அறிவை இதுவரைக்கும் நமக்குக் கிடைக்காத பலனாக மாற்றித் தரும். மேலும் ஒன்றுள்ளது, மற்றவர்கள் செயல்படும் துறைக்குப் பதிலாக நாம் செயல்படும் துறையிலிருந்தே (field) உதாரணம் வேண்டும் என்று நம் அறிவு கேட்கும். அப்பட்சத்தில் ஒரே கருத்து, நூற்றுக்கணக்கான சூழ்நிலைகளில் நிரூபிக்கப்படுகிறது. ஒவ்வொன்றும் விசேஷமாக இருப்பதால், எல்லாம் நம்முடைய நடைமுறை அறிவிற்குத் தெளிவூட்டுவதாகவும் இருக்கும். மேலும், இத்தகைய கருத்துகள் வரம்பில்லாமல் உள்ளன. இறுதியாக ஆன்மீகமும் செல்வ வளமும்என்ற கருத்து ஆன்மீகமே செல்வ வளம் என்று மாறிவிடும்.

பொதுவாக, நேரத்தை நாமே வரவழைக்கும் கட்டம்: அறிவின் முறைகளைக் கைவிட்டு ஆன்மாவின் முறைகளை ஏற்க வேண்டும். ஒவ்வொரு மனிதச் செயலிலும் இது வெளிப்படுவதால் இவற்றுள் சில: (1) சுயநலத்திலிருந்து பரநலத்தோடு நடப்பது, (2) உரிமையைக் கேட்காதது, (3) பிறர் கண்ணோட்டத்தில் பிரச்சினையைக் காண்பது, (4) அவசரத்தைக் கைவிட்டு, பொறுமையைக் கடைப்பிடிப்பது போன்றவை நீண்ட பட்டியல். ஓர் உதாரணம்:

1970இல் 600 அடிக்கு 12 அங்குல போர்வெல் போட விரும்பிய விவசாயி ஒருவர், தமிழ்நாட்டில் 400 அடிக்கு மேல் 'போர்' போடும் மெஷின் இல்லை, அதுவும் 8 அங்குலத்துக்குத்தான் துளைக்கும்என அறிந்து நெய்வேலியை அணுகினார். அவர்கள் எளிதில் சம்மதம் தெரிவிக்கவில்லை. சம்மதம் தெரிவித்தபோது, ரூ.1 லட்சத்து 25

ஆயிரம் கட்டணம் கேட்டனர். இதர செலவுகளுக்கு 15,000 ரூபாயை இவர் ஒத்துக்கொள்ள வேண்டும்என்றனர். வேலை கூடிவர தாம் பொறுப்பில்லைஎன்றனர். பின்னர் ரூ.1,25,000ஐ ரூ.96,000ஆகக் குறைத்தனர்.

விவசாயி வேறு வழியுண்டாஎனக் கருதிய பொழுது, அப்பொழுதுதான் புதியதாக போர் மெஷின் வாங்கிய ஒருவர் வேலையை ஒத்துக்கொண்டார். விவசாயி செய்த ஆராய்ச்சியில் இந்த வேலைக்கு ஆகக்கூடிய செலவு, அதற்குரிய வட்டி, தேய்மானம் உட்பட ரூ.15 ஆயிரம் ஆகும்என அறிவார். பேரம் பேசும் நிலையில் அவர் இல்லை.

'நேரம் வந்தால் வேலை நடக்கும். மனம் திருப்திப்படும் வகையில் நடக்கும். அதற்கு நான் என்ஜினியர் கண்ணோட்டத்தில் பேரத்தை அணுகுவேன்' என முடிவு செய்தார். முடிவு மனத்தைத் தொட்டு வழிவிட்டு, ஆத்மாவின் கதவைத் திறந்து, அகன்ற பரவெளியை எட்டியது. என்ஜினியரிடம் போய், "நான் பேரம் பேச விரும்பவில்லை. உங்களுக்குக் கணிசமான லாபம் பெறும் தொகையை எனக்குப் பொருந்துமாறு கூறவேண்டும்" என்றார். "இதர செலவுகளையும், 'போர்' கூடிவரும் பொறுப்பையும் நான் ஏற்றுக் கொள்கிறேன், ரூ.36,000 கொடுங்கள்" என்றார் என்ஜினியர்.

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

சமூகத்தில் மேல் மட்டத்திலுள்ளவர், சமூகத்தில் தாழ்ந்தவரிடம் ஆன்மீகப் பலன் பெற விரும்பினால், தாம் ஆன்மீகத்தில் தாழ்ந்தவர்என அறிய வேண்டும்.

***தாழ்ந்தவர் உயர்ந்தவரிடம் பெறுவது பலன்.***



# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

91. *மனித மனத்தில் நம்பிக்கைஊற்று வற்றுவதில்லை.*

✡ **நம்பிக்கையின் ஊற்றுக்கு உறைவிடம் விழிப்பான ஆன்மா.**

92. *அதிகமான நம்பிக்கை ஏமாற்றமளிக்கும்.*

✡ **அதிகமான நம்பிக்கை ஞானமாகும்.**

93. *நல்லது நடக்கும்என்று நம்பு.*

✡ **நல்லது*மட்டும்* நடக்கும்என்பது அன்பர் வாழ்வு.**

94. *உடல்நலக்கேடு ஆத்மாவின் நலமாகலாம்.*

✡ **ஆழ்ந்த தியானம் உடல்நலக்கேடு உடல்நலமாக மாறுவதை கட்டம் கட்டமாகக் காட்டும்.**

95. *வாழ்வின் இனிப்புச்சுவை மகிழ்வே.*

✡ **மகிழ்வையும் இனிமையாக்கும் மகிமையுண்டு சமர்ப்பணத்திற்கு.**

*தொடரும்....*

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

பெறும் நிலைகள் அனைத்திலும், தான் தாழ்ந்த நிலையில் இருப்பதை உணர்வதே (sincerity) உண்மை நோக்கம் ஆகும்.

***பெறுபவர் தாழ்ந்தவர்.***

# பூரண யோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

**(11) மூன்றாம்நிலைக் காலம்**

நாம் வாழும் உலகம் காலத்தால் நடத்தப்படுவது. ரிஷி காலத்தை கடந்தவர். ஸ்ரீ அரவிந்தம் மூன்றாம்நிலைக் காலத்திற்குரியது. நம் உலகில் எந்தக் காரியத்திற்கும் உரிய நேரமுண்டு. நினைத்தவுடன் பலன் வாராது. ரிஷி விதையை நட்டால் உடனே செடியாகும். ரிஷிப் பிண்டம் ராத்தங்காது. அவருக்குக் காலம் தேவையில்லை. ஆனால் ரிஷி அதுபோல் எப்பொழுதும் நடக்க முடியாது. ஸ்ரீ அரவிந்தவாழ்வு தெய்வீகவாழ்வு. அதில் காலத்திற்கு சக்தியில்லை. நினைத்தவுடன் செயல் பூர்த்தியாகிப் பலன் தரும்.

***இவை அறிவுக்குப் புறம்பானவை.***

***ஆனால் அனுபவம் இவற்றை அறியும்.***

இதற்கு உதாரணங்களுண்டு. விளக்கம் உண்டு.

எவரும் எதிர்பாராமல் லால்பகதூர் சாஸ்திரி திடீரென 5 நாளில் பிரதமரானார். அவருக்குப்பின் இந்திரா அதேபோல் பிரதமரானார். சட்டப்படி காபினட்டில் இரண்டாம் நபர் நந்தா. அவரே உரிமை உடையவர். நடைமுறையில் கட்சி ஆதரவு மொரார்ஜிக்குண்டு. சாஸ்திரியும், இந்திராவும் அன்னையை தரிசித்தவர். அவருடன் அன்னையை தரிசித்த காமராஜ் அவர்களைப் பிரதமராக்கினார். எல்லா அன்பர்கள் வாழ்விலும் ஏதோ ஒரு நேரம் இது போல் காரியங்கள் நடந்துள்ளன. நாம் அதை இக்கோணத்தில் கருதுவதில்லை.

இல்லறம் காலத்திற்குரியது. துறவறம் காலத்தைக் கடந்தது. துறவறத்தின் தூய்மையுடன் நடத்தும் இல்லறம் மூன்றாம்நிலைக் காலத்தில் செயல்படுவது.

இயற்கை காலத்தால் நடக்கிறது. ஆத்மா காலத்தைக் கடந்தது. இது சாட்சி புருஷன். வளரும் ஆத்மா மூன்றாம்நிலைக் காலத்திற்கு உரியது. இயற்கையும், ஆத்மாவும் எதிரானவை. நாம் இயற்கைக்கு உரியவர். துறவி ஆத்மாவில் உறைபவர். துறவியின் ஆத்மா ஆதி, அந்தமில்லாதது, மாற்றமில்லாதது, வளராதது, சாட்சியாயிருப்பது. வளரும் ஆத்மா - சைத்தியப் புருஷன் - ஸ்ரீ அரவிந்தம் கூறுவது. ரிஷிகள் தவத்தால் ஆத்மா சித்திக்கப் பெற்று மோட்சம் அடைந்தனர். அது பரமாத்மா. நம்மிடம் உள்ளது ஜீவாத்மா. ஜீவாத்மா அழிந்து பரமாத்மாவை அடைவது மோட்சம்.

ஸ்ரீ அரவிந்தம் மோட்சத்தை நாடவில்லை. பூலோகச் சுவர்க்கத்தை நாடுகிறது. இயற்கை ஆத்மாவை நாடுவது மோட்சம். இயற்கை தன்னுள் உள்ள ஆத்மா செயல்படும்படி வாழ்ந்தால், இயற்கையின் ஆத்மா வளர ஆரம்பிக்கும். அது 3ஆம்நிலைக் காலத்திற்குரியது. தொழிலாளி உழைப்பவன். முதலாளி இலாபம் பெறுபவன். ஒரு தொழிலாளி முதலாளியானால், தான் தொழிலாளியாக இருந்ததை மறந்து முதலாளியாக நடப்பான். ஒரு கம்பனி முதலாளி எல்லா தொழிலாளிகட்கும் சம்பளம் தருவதுடன் இலாபத்தில் அவர்கட்கு பங்கு வரும்படி ஷேர் சர்ட்டிபிகேட் வழங்கினால், அக்கம்பனியில் தொழிலாளி முதலாளி ஆகிறான். அக்கம்பனியின் வருமானம் 10, அல்லது 100 மடங்கு பெருகுகிறது. இந்தநிலை ஓரளவு இன்று உலகில் உண்டு. பூரணமாக இல்லை. கம்பனி ஆரம்பத்திலிருந்தே இந்த அடிப்படையில் நடப்பது மூன்றாம்நிலைக் காலத்திற்குரியது. நெடுநாளில் நடப்பது குறுகிய காலத்தில் நடப்பதை அன்பர்கள் கண்டுள்ளனர். அதைப் பாராட்டினால், யோகவாயில் திறக்கும். பலனைக் கருதினால் பலன் கிடைக்கும். தத்துவத்தைக் கருதினால் யோகம் புரியும், வழிவிடும். நம் அனுபவத்தை மீண்டும் மனதில் கொண்டு வந்தால், பல காரியங்கள் இப்படி நடந்தது தெரியும். பார்வை மாறினால் பலன் யோகமாகும்.

**(14) மூன்றாம்நிலைக் காலம்**

காலம், காலத்தைக் கடந்தது, இரண்டும் சேர்ந்துள்ள மூன்றாம் நிலைக்காலம் ஆகிய 3 காலங்கள் உள்ளன.

(1) **காலம்என்பது நாம் வாழும் நிலை. இங்கு எக்காரியத்திற்கும் உரிய நேரம் தேவை.**

**எதற்கும் எதிரானதுண்டு. உ.ம். ஒளி X இருள்.**

(2) **காலத்தைக் கடந்தநிலை ரிஷியின் நிஷ்டைக்குரியது.**

**நமக்குத் தேவைப்படும் காலம் அவருக்குத் தேவைப்படாது.**

**சங்கரர் இந்தியாவைச் சுற்றிவர அதுபோல் பிரயாணம் செய்தார்.**

**நினைத்தவுடன் நினைத்த இடம் செல்வார்.**

**அங்கும் எதிரானதுண்டு.**

**அந்நிலையிலும் தீமை, இருள் உண்டு.**

(3) **மூன்றாம்நிலை.**

**காலமும் காலத்தைக் கடந்த நிலையில் சேர்ந்த நிலையிது.**

**இங்கு எதிர்மறையில்லை. ஒளிக்கு எதிரான இருளில்லை.**

**ஒளிமட்டும் உண்டு. தீமையில்லை, நன்மைமட்டும் உண்டு.**

**எந்தச் செயலுக்கும் நேரம் தேவையில்லை.**

**மனிதன் காலத்தைவிட்டு இறைவனை நாடினால் காலத்தைக் கடப்பான்.**

***காலத்தைவிட்டு அகலாமல், காலத்துள் உள்ள இறைவனை நாடினால், காலத்துள் கடந்தது வரும்.***

**இது சத்தியஜீவிய நிலை.**

**நம் வாழ்வில் மனம் உருகியநிலையில் நாம் செய்யும் காரியங்கள் ஆயிரம் மடங்கு பெருகுவது இம்மூன்றாம்நிலைக் காலத்தை நாம் அடைவதால்என நாம் அறிவதில்லை.**

**இது அன்னை வாழும் காலம்.**

*தொடரும்......*

❀ ❀ ❀





# மனிதனும் மிருகமும்

சியாமளா ராவ்

'மனிதன்' என்கிற நான்கெழுத்துக்குள் 'மனிதம்' என்கிற நான்கு எழுத்துகள் இருக்கிறதா, இல்லையா?

இந்தக் கேள்விக்குச் சரியான பதில் எங்கு கிடைக்கும்? எவரிடம் கிடைக்கும்?

இந்த அலைமோதும் வாழ்க்கையில் இந்த 'மனிதம்', 'மனிதன்' என்னும் சிந்தனைப் பற்றிய கவலை எவருக்கும் இல்லைஎன்று சொல்ல முடியாவிட்டாலும், அவ்வப்போது வரும் இந்தச் சிந்தனைக்குப் பதில் தேடுவதில் அவர்களுக்கு அக்கறையுமில்லை, விருப்பமுமில்லை. அக்கறையிருக்கும்போது, அதற்கான சிந்தனைகளையோ, வழிகளையோ நாடுவதற்கு வேண்டிய நேரம் கிடைப்பதில்லை. நேரம் கிடைப்பதில்லைஎன்பது, எல்லாவற்றிலிருந்தும் விடுபட நினைக்கும் ஒரு 'நொண்டிச்சாக்கு' என்பதுதான் உண்மை.

ஆறறிவுஎன்பது மனிதர்களுக்குமட்டும் தந்தது எதனால்? இன்றுவரை புரியாத புதிர். ஐந்தறிவு மிருகங்களுக்கு மட்டுந்தான் என்பது, மனிதனுக்கும், மிருகத்திற்கும் உள்ள வித்தியாசங்களை காட்டுவதற்காகவா?

இதில் அதிகப்படியான அறிவை வைத்துக் கொண்டு மாந்தர்கள் ஆடும் ஆட்டம்.... கொஞ்சமா, நஞ்சமா?

நல்லது, அல்லாததுஎன்று பிரிக்கத் தெரிந்த மாந்தர்களுக்கு, ஏன் அல்லாததைத் தம் தேவைக்கேற்ப உபயோகப்படுத்திக் கொள்ளும் எண்ணம் உற்பத்தியானது? தேவையற்றதை, தேவைகளாக்கித் தம் சுயநலத்திற்காக என்ன வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் நம் விருப்பப்படிச் செய்யலாம்என்கிற

மனோபாவம் நல்லது அன்றுஎன்பதை ஏன் உணர முடியாமல் இருக்கிறார்கள்? உணர முடியாமல் இருக்கிறார்கள்என்பதைவிட, உணர்ந்ததினால்தான் உணர முடியாமல் இருக்க வேண்டுமென்பதை உணர்ந்து, அதன்படிச் செயல்படுகிறார்கள்என்பதே நிஜம்என்பது உண்மை. இந்த மனோபாவம், மனநிலை நிச்சயமாக மனிதர்களுக்கு மட்டுமே உள்ள சுயநலந்தான்.

அதுவும் சமீபகாலத்தின் நடப்புகள் ஏன், எப்படி மாறியது என்பது .......

நல்ல பால், நல்ல காற்று, நல்ல நீர்என எல்லாவற்றிலும் நல்லதே கிடைத்தது. அதனால் ஆரோக்கியம்என்பது நன்றாகவே இருந்தது. மனநிலையும், எத்தனை கோபதாபங்களிருந்தாலும் விட்டுக் கொடுத்தலும், இணைந்து செல்வதிலும், மதங்களைப் பற்றிய வெறித்தனமில்லாமலுமிருந்தது உண்மைதானே.

எல்லாமே தடம் மாறிப்போனது எப்போது?

வசதிகள், வாய்ப்புகள், புதியபுதிய டெக்னாலஜி, கம்ப்யூட்டர் படிப்புஎன்பது மிகவும் உச்சஸ்தாயியில் எல்லாரையும் உட்கார வைத்தது. அது மிகவும் நல்ல விஷயமேயன்றி, தவறே அல்லவே. படிப்பிலும், வேலையிலும் முன்னேற்றம்என்பது மிகவும் நன்மைதானே. நாடும் செழிப்பாகும்தானே. ஆனாலும் அதிலும் ஏதோ ஒரு குறை.... குறை என்பதைவிட நிறைவுஎன்பது இல்லாமல் போனது ஏன்? இன்னும், இன்னும் என்னும் ஆவலாதிதானே அதிகம்.

ஆறறிவு உள்ளவர்களாகிய நாம், ஐந்தறிவு உள்ளதைப் போல மாறிப்போயிருக்கிறோம்என்பதே உண்மை. ஆனாலும் அதைவிடப் பெரிய உண்மை மிருகங்களே..... இப்போதும் மாறாமல், எப்போதும் இருப்பதுபோல் அவைகள் தங்கள் இயல்போடு இருப்பதுதான். மாறியது மனித இனம்தான். அதுவும் ஆறறிவுள்ள நாம்தான்.

கணவன், மனைவிஎன்பது ஒரு நிலையான நல்ல குடும்பத்திற்கு ஆரம்பமாகும் சங்கமம். ஆனால்.... இந்த இணைப்பில்தான் தற்காலத்தில் எத்தனை, எத்தனை விகல்பங்கள், விடுபட்டுப் பிரிதல்.... இதெல்லாம் மனித இனத்திற்கே இப்போது ஏற்பட்டிருக்கும் மிகப்பெரிய



கேவலமான நிலைகள், பரிதாபமான அவலங்கள்.

காரணம்.... ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மைஎன்பது அற்றுப்போன நிலையில், நீயா, நானாஎன்கிற போட்டி மனப்பான்மையே வெற்றிக்கொடிக் கட்டி பறக்கிறது.

படிப்பும், வேலையும் அவர்களை மேம்படுத்துவதற்குப் பதிலாக, தணிந்து போகும் மனநிலையைத் துடைத்து எறிந்துவிட்டதன் காரணமேயன்றி வேறில்லை.

நல்ல உயர்ந்த படிப்பும், கை நிறையஎன்பதைவிட பை நிறைய வருமானமும் ஈட்டுவது நல்லதுதான். விற்கும் விலைவாசியில் இருவரும் வேலைக்குப் போவதும் தேவைதான்.

இந்தத் தேவைகள்என்பன, அத்துமீறிப் போவதால்தான் எல்லா விதங்களிலும் மீறல்களைத் தங்களையறியாமலேயே தம்பதிகள் அந்த அரங்கத்தினுள் சென்று மீள முடியாமல் போகிறார்கள்.

அப்போது அவர்களுக்கு வேண்டியதுதான் என்ன?

நிச்சயமாக ஒரு நல்ல பாதை தேவை. அவர்கள் மனதின் உள்ளேயிருக்கும், அடைபட்டுக் கிடக்கும் அத்தனையையும் வெளியே கொண்டுவர, ஒரு out-let தேவை நிச்சயமாக. அந்த வெளியே வரும் வழியை எங்கே தேடுவது?

ஆணானாலும் சரி, பெண்ணானாலும் சரி, இருவருக்குமே அந்தவழி தேவை. தேடுவதுஎன்பது சிரமம்என்று நினைப்பவர்களுக்கு, எல்லாமே சிரமம்தான்.

ஆனால், நாம் தேட வேண்டியது, மனதிற்கு இதம் தரும், வல்லமையைத் தரும், நிம்மதியைத் தரும், ஆனந்தமும், சந்தோஷமும் அள்ளிஅள்ளித் தரும் இடம் இன்றும் இருக்கிறதே. ஏன் அந்த இடத்தை நோக்கி நாம் செல்லக்கூடாது?

“எனக்குத் தெரியாதே, யார் வழி காட்டுவார்கள்?” என்று முடங்கிப் போவது வெகு சுலபம். அது போகாத ஊருக்கு வழி தேடுவது போன்றுதான்.

ஒரு கடைக்குப் போனால், நாம் எதை வாங்கப் போகிறோமோ அதையும் மறந்து, வேறு ஏதேதோ பொருள்களை மூட்டைக் கட்டிக் கொண்டு வருகிறோம். ஒரு புடவை வாங்க கிட்டத்தட்ட பத்துப் பதினைந்து புடவைகளைப் புரட்டுகிறோம். அதற்கெல்லாம் மெனக்கெடும் நாம், நம் மனதை, நம் சரீரத்தை, நம் எண்ணங்களை சுத்தீகரித்து, ஸ்புடமாக்கிக் கொள்ளும் நல்வழியை நாட ஏனோ தயங்குகிறோம், போராட்டத்தை விடமறுக்கிறோம்.

வேண்டாமே இந்தத் தயக்கமும், போராட்டமும், தேவையே இல்லையே. அதற்கான வழியை நம் மனம் தேடவேண்டும். மனத்தை ஒருங்கிணைத்து, உண்மையான ஆர்வத்துடன் இருக்கும் தேடல், வழியை மனப்பூர்வமாக நம் எதிரே கொணர்ந்து நிறுத்தும்என்பது சர்வ நிச்சயம்.

அந்த 'சர்வ நிச்சயம்' என்னும் வழியைக் கண்டுபிடிக்க முடியாமல், வழியைத் தேடாமல், அல்லல்பட்டு, நொந்து நூலாகி, முடிவில் களைத்துப்போய், ''அன்னையே சரணம்'' என்று தேடி வந்து அன்னையின் பாதாரவிந்தங்களை கெட்டியாகப் பற்றிக்கொண்ட ராமனாதனின் வாழ்க்கையை எத்தனை அழகாய், நல்லவிதமாய் அவனைத் தன் குழந்தையாய் பாவித்து, அணைத்து, தடவிக் கொடுத்து, சுதாரித்து, தைர்யம் அளித்து, ஒரு நல்ல இதயமுடைய மனிதனாக, குடும்பத்தின் சிறந்த தலைவனாக மாற்றினாரே.... இந்த அதிசயம், அதிசயம்மட்டுமில்லை.... ஆனாலும் உண்மைதானே.

❀ ❀ ❀

''பாரு.... பாரு.... எங்கேயிருக்கே? இங்கே வாயேன்மா.... சீக்கிரமா.... ம்.... வேகமா வா.... ஒரு விஷயம் சொல்லணுமே....''.

ஒரு கையில் பிசைந்த சாதத்துடன் தட்டு, மறுகையில் இரண்டு வயதுக் குழந்தை ராமு, வயிற்றில் எட்டு மாதக் குழந்தையை சுமந்தவண்ணம் நிதானமாய் வந்தாள் அகலக் கால் வைத்து நடந்தபடி. முகத்தில் வாட்டம், களைப்பு. அப்படியே ராமநாதனை நிமிர்ந்து பார்த்தாள்.

''பாரு, ஒரு ஃபர்ஸ்ட் கிளாஸ் சந்தர்ப்பம். என் ஃப்ரண்ட் கோவிந்தன் இருக்கானோல்லியோ, அவனோட நானும் சேர்ந்து ஒரு நல்ல பிஸினஸ் ஆரம்பிக்கலாம்னு இருக்கேன். இத்தனை நாள் அதுக்குத்தான் ரெண்டு பேருமா எத்தனை ஆலோசிச்சோம்கறே... கடைசியில நல்ல வழி பிடிபட்டுடுத்துடி பாரு. ம்... அதுதான் வேக வேகமா ஓடி வந்தேன். சூப்பர் டிஸ்கஷன், அபாரமான யோசனைகள், எப்டி சாதிக்கறதுங்கற வேகம், எல்லாமா ஒண்ணுத்துக்கொண்ணு கைக்கோத்துண்டு எங்க ரெண்டு பேரையும் தூண்டிவிட்டுடுத்து. ம்...ஹூம் இனிமே ஒரு செகண்ட் கூட காத்திருக்க முடியாது, பாரு. எந்த ஒரு நல்ல யோசனையையும், காரியத்தையும் சூட்டோட சூடா செய்ய வேண்டாமோ... அதான் ஓடி வந்துட்டேன்.... என்ன அப்டி பார்க்கரே.....''

கடைசி வரியில் ஒரு கோபத்தோடு, ஆங்காரமுமாய்தான் வெளிப்பட்டது.

எதுவுமே பேசாமல் அவனையே உற்றுப் பார்த்தாள் பார்வதி. அதில் எந்த உணர்வுகளும் வெளிப்படவேயில்லை.

''மண்டுகமே.... எத்தனை ஆர்வத்தோட, பரபரப்போட வந்து உங்கிட்டே சொல்றேன்.... பாரு... ஹூம்... எந்த உணர்ச்சியுமில்லாம மரக்கட்டையா நிக்கிறியே.... நான் பேசினது புரியலையா.... இல்லே.... தெனாவட்டா.... என்ன... ம்.... இப்ப வர கோவத்துக்கு.... சே... போட்டு மிதிக்கலாம்னுதான் ஆத்திரமா வரது. முடியாதே... என்னோட வாரிசைன்னா சுமந்துண்டிருக்கே..... சே.... என்னோட சந்தோஷமே போச்சுடி.... அத்துப்போச்சு.....''

சொல்லிவிட்டு வெளியே போனவனைப் பார்த்து நீர் மல்க மனதில் நினைத்துக் கொண்டாள், ''என்னிக்கு நீங்க என் கழுத்துல தாலி கட்டினேளோ அன்னிலேருந்தே என் சந்தோஷமே காணாமல் போயே போச்சே....''.

''ம்மா.... மம்மும்மா... அம்மா....''

சட்டென உணர்விற்கு வந்தவள், குழந்தைக்கு சாதம் ஊட்டலானாள்.

❀ ❀ ❀

வயிறு பசித்தது. ஆனால் ஆகாரம் இறங்கவில்லை. பலவந்தமாய், வயிற்றுக்குள் தள்ளினாள். தண்ணீர் குடித்தவுடன் தெம்பு ஏற்பட்டது. கதவு தட்டும் சத்தம். இத்தனை சீக்கிரம் திரும்பி வந்துட்டாரே, என்ன ஆயிற்று? ஏதாவது சண்டை, சச்சரவா?

பயத்துடனேயே கதவைத் திறந்தாள். வந்தது பக்கத்து வீட்டு மாமி.

''பாரு, சாப்டியாம்மா? இதோ பாரு, கையில ஒண்ணு, வயத்துல ஒண்ணு சுமந்துண்டிருக்கே. ஏதாவது வேணும்னா கேளு, நான் தரேன். வயத்தைக் காயப்போடாதே. உன் ரெண்டு குழந்தைகளுக்கும் அம்மாவா இருக்கணுமா, வேண்டாமா? சொல்லுடி, பாரு. அவனை நம்பி பிரயோஜனமில்லே. சரி... சரி... அழாதே. தயிர் சாதமா பிசைஞ்சுண்டு வந்துருக்கேன், சாப்டு.... சரியா? கண்ணுல தண்ணி வரப்டாது, சரியா? தைரியமாயிரு.... வரேண்டி பாரு. ம்... அவன் வரதுக்குள்ளே சாப்டு, இல்லேன்னா அது அவன் வயத்துக்குள்ள போயிடும். போ... சரியா?''.

தலையையாட்டிவளுக்கு, கண்களை மூட முடியாமல் கண்ணீர் தளும்பியது.

❀ ❀ ❀

பிஸினஸ் பண்ணுகிறேன்எனக் கூறி, முதல் முதலாய், திருமணமான இரண்டே மாதத்தில் இரண்டுவட செயினை எடுத்துக் கொண்டு போனான். என்ன பிஸினஸ் செய்தான், எப்படிச் செய்தான், அவளுக்குத் தெரியாது. ஆனால் சில கெட்ட பழக்கங்களைத் தன்னுடன் இணைத்துக் கொண்டான்.

பார்வதி ஒரு நாள் அவனைக் கேட்டாள், ''என்னமோ நெடி வரதே.... ம்... என்னால முடியலே..... வ்வே..... ம்.... வாந்தி வரது.... என்ன சாப்டேள்?''

''அதாண்டி தெரியலே.... என் ஃப்ரெண்ட்தான் குடுத்தான். ஆனா, இப்ப என்னமோ பண்றது. வாந்தி வருது.... ம்மா.... ப்பா....''.



கீழே விழுந்து புரண்டான். வலியால் துடித்தான். வாய் வார்த்தைகளைத் துப்பியது துண்டம், துண்டமாக.

புரிந்து கொண்ட பார்வதி, எதையும் செய்ய முடியாமல், குழந்தையை அணைத்துக் கொண்டு வாசல் வராந்தாவில் உட்கார்ந்தாள். மனதில் பலவிதமான யோசனைகள் ஒன்றின் மேல் ஒன்று ஏறிக்கொண்டு குதியாட்டம் போட்டது. அவளால் அதை அடக்க முடியவில்லை.

பெற்றவர்கள் வீட்டிற்கு அடைக்கலமாகப் போகலாம்தான். அவர்களும் அரவணைத்து, அணைத்துக் கொள்வார்கள்தான். ஆனால், கூடப்பிறந்த சகோதர, சகோதரிகளின் எதிரில் தன்னிலை இரக்கத்தால் அவளால் அவர்களோடு இணைந்துபோக முடியவில்லை. நம் கஷ்டம் நமக்கு மட்டுந்தான். சந்தோஷத்தை யாரிடம் வேண்டுமானாலும் பகிர்ந்து கொள்ளலாம். கஷ்டங்களை? ம்...ஹும்... நமக்குள்தான் வைத்துக்கொள்ள வேண்டும். அதனால் அங்கும் போகவில்லை.

வேண்டிக் கொண்டாள் தன் மனதில், ஞாபகம் வந்த தெய்வங்களிடம். ஏதாவது ஒரு தெய்வமாவது தனக்குச் செவிசாய்க்காதாஎன்கிற நப்பாசையை இன்னும் கைவிடாமல்தான் இருந்தாள்... ம்.... ஹும்.... எந்தவிதமான முன்னேற்றமும் இவளுக்குத் தெரியவில்லை. ஆனால் ராமனாதன் பல விதங்களில், பல வழிகளில், வேண்டாதவைகளையெல்லாம் கற்றுக் கை தேர்ந்தவனானான் என்பதுதான் நிஜமானது.

❀ ❀ ❀

அதது, அந்தந்தக் காலத்தில் நடப்பது நடந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால், நாம் அதை உணருகிறோமோ, இல்லையோ... நடப்பது நிற்பதில்லை. பார்வதியின் பிரசவ நேரம் நெருங்கிவிட்டது. தன்னந்தனியாக துடித்துக் கொண்டிருந்தாள். முதல் குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது. எழுந்திருக்கவும் முடியவில்லை. யாரைக் கூப்பிடுவது? குரல் எழும்பவில்லை. வாயைத் திறந்தாலே பேச்சு வாராமல், வலியில்.... ஹா.... ஹா.... என்ற அனத்தல்தான் வெளிப்பட்டது.

யாரைக் கூப்பிடுவது? எப்படிக் கூப்பிடுவது? யார் காதிலாவது விழுமா? என்ன செய்வேன்? என் கத்தலில் அந்தக் குழந்தையும் எழுந்துவிட்டால்.... என்ன செய்வேன்? யோசிக்கும்போதே பளீரென்ற வலி.... சாட்டையடிபோல் விழுந்தது.

''அம்மா..... அம்மா..... அம்மா.....''.

பெரிய கூக்குரல் அவளிடமிருந்து வெளிப்படவும், பக்கத்து வீட்டிலிருந்த மாமி வரவும் சரியாகயிருந்தது. அவர் கையில் அன்னையின் சிறுபடமும், மற்றொரு கரத்தில் சில பூக்களுமாக வந்தவர், சட்டென்று அவளருகில் வந்தார். நிலைமையைப் புரிந்து கொண்டார். அன்னையை அவள் வயிற்றின் மேல் வைத்து, சில வினாடிகள் பிரார்த்தித்தார். அந்தப் பூக்களை ஒரு தட்டில் வைத்து, நீர் தெளித்து, அவளிடமிருந்து அன்னையை ஒரு பலகையின் மீது வைத்தார். பதட்டப்படவில்லை. ஆனால், அதரம் மட்டும் 'அன்னையே சரணம்' சொல்லிக் கொண்டிருந்தது. இத்தனையிலும் முதல் குழந்தை இன்னும் எழுந்திருக்கவில்லை.

மாமி மளமளவென்று அவளுக்கு அந்த நேரத்திற்கு வேண்டிய சுஸ்ருஷைகளைக் கனிவாகச் செய்தார். மனது துடித்த துடிப்பில் அன்னை மட்டுமே சுழன்று கொண்டிருந்தார். அன்னை அவளிடமே வந்துவிட்டார் என்றுதான் கூறவேண்டும்.

எந்த ஓர் இக்கட்டான சூழ்நிலையிலும் சரி, சமைக்கும்போது சின்ன சூடு பட்டாலும் சரி, எந்த ஒரு வலிக்கும், தொந்திரவுகளுக்கும், ஆயாசமாக உட்காரும்போதும், ஆச்சரியப்படும்போதும், நம் உணர்வுகளை வெளிப்படுத்தும் (ஆணானாலும் சரி, பெண்ணானாலும் சரி) ஒரே ஒரு வார்த்தை 'அம்மா' என்கிற மூன்று எழுத்துகள்தான். அந்த மூன்றெழுத்தில்தான் நம் மூச்சுக்காற்றே சுழன்று கொண்டிருக்கிறது. இது எல்லாருக்குமே பொதுவான சத்தியமான உண்மைதானே.

வலி தீவிரமாகியது. மெல்ல பார்வதியை எழுப்பி, அங்கு இருக்கும் அடுத்த அறைக்குள் அழைத்துச் சென்று, விரித்திருந்த பாயில், உடுப்பை தளர்த்தி, வாகாகப் படுக்க வைத்தாள். ஸ்டவ் பற்ற



வைத்து, சுடுநீர் மற்றும் தேவையானவைகளை மளமளவென்று ஒவ்வொன்றாய்க் கொண்டுவந்து வைத்தாள். யாரையாவது கூப்பிடலாமா? வாசல் வரை போனவளின் மனதுள் தோன்றியது என்ன? ஏன் நின்றுவிட்டாள் அப்படியே? சட்டெனத் திரும்பி பார்வதியின் அருகில் உட்கார்ந்தாள். கண்களை மூடி தியானித்தாள். அன்னையின் படத்தை அவள் கண்களில் படுமாறு அங்கிருந்த ஸ்டாண்டில் சாய்த்து வைத்தாள்.

''பார்வதி, பயப்படாதே. அதோ பாரு, அன்னை எத்தனை அழகா சிரிச்சுண்டு உன்னையே அன்போடவும், ஆதரவோடும், தீட்சண்யமா பார்க்கறா பார்த்தியா. உன்னைப் பற்றிய கவலையோ, வலியோ எதுவானாலும் அன்னையைப் பார்த்து கும்பிடும்மா, பாரு. உன்னோட அத்தனை வலிகளையும், வேதனைகளையும் தாம் எடுத்துண்டு, உனக்கு எந்த இம்சையையும் தரமாட்டா.... பார்த்துண்டேயிரேன்.... புரியறதோம்மா.... நான் உனக்கு பக்கபலமா வந்துட்டேனேன்னு சொல்றாப்பல சிரிக்கிறா பாரேன். புடவையில தாமரைப் பூ தெரியறதோன்னோ... அதனால 'லோட்டஸ் மதர்'னு சொல்லுவா. அன்னையை நாலு அவதாரம்னு சொல்லுவா? எனக்கு என்னமோ.... இந்த உலகத்துலயிருக்கிற எல்லாக் கடவுள்களும், அப்பனும், அம்மையும், அத்தனையும்... இதோ பாரு.... பார்க்கறியோன்னோ.... இந்த லோட்டஸ் மதர்க்குள்ளேயே மனசால அடங்கியே போய்ட்டாடி... உனக்கு வலிக்கவேயில்லையோன்னோ..... உன்னோட வலிகளையெல்லாம் தாம் எடுத்துனுட்டா.... இதோ பாரு.... பார்த்துண்டேயிரு.... இப்ப உன் குழந்தை வழுக்கிண்டே வந்துடுத்தே....''

''அம்மா''.... பெரிய குரலில் ஒரே ஒரு முறை குரல் கொடுத்த பார்வதியோடு, வெளியுலகத்தைப் பார்க்க வந்த அந்த சிசுவின் அழுகைக் குரலும் இணைந்து கொள்ள, மளமளவென்று அடுத்தடுத்து செய்ய வேண்டிய வேலைகளை கிடுகிடுவென செய்தாள் மாமி. வயதையும் மறந்து செயல்பட்ட அந்த வேகம், அவளைத் தவிர யாருமில்லாத அந்த நிலையில் தைர்யமாகி எல்லாம் தெரிந்ததுபோல் செய்ய வைத்தது யார்? மொத்தத்தில் அந்த மாமி அந்த நேரத்தில் கையில் அன்னையின் படத்தோடும், பூக்களோடும், மனதில்

அன்னையின் தியானத்தோடும் வந்தது எதனால்? எப்படி? எதற்கு?

நல்ல உள்ளம், நல்ல எண்ணம், பொறுமை, கசடுகளற்ற மனம், இத்தனையும் உள்ள பார்வதியைத் துடிக்கவிட முடியுமா?

பார்வதியின் துயரங்களுக்கு அவ்வப்போது உதவும் அன்னையின் பக்தியைத் தவிர, அன்னை, ஸ்ரீ அரவிந்தரைத் தவிர, வேறு எதைப் பற்றியும் நினைக்காமலிருந்த மாமியையே தூண்டிவிட்டு, சரியான சமயத்தில் பார்வதியின் பிரசவத்திற்கு அவளையே, அதுவும் அன்னையை மனதில் மட்டுமில்லாமல் கரங்களில் பூக்களோடு அன்னையையும் ஏந்திக் கொண்டு, அந்த நாம ஸ்மரணத்தோடு அனுப்பியது, தூண்டிவிட்டது யாரென நமக்குப் புரிந்துவிட்டது அல்லவா?

''தெய்வம் மனுஷ்ய ரூபேனா''.

''ஆமாம்.... தெய்வம், தெய்வமாகத்தான் இருக்க முடியும். உலகத்தில் இருக்கும் எத்தனையோ கோடி மக்களுக்கு அவரே வந்து செய்ய வேண்டும்என்று நாம் நினைத்தால்... அது தவறு. தெய்வமாகிய அன்னை ஒருவர்தான். நாமோ கோடிக்கணக்கில். அத்தனை பேருக்கும் அன்னை நிச்சயமாக, நம் பிரார்த்தனைகளின் வீர்யத்திற்கும், தீவிரத்திற்கும் ஏற்றவாறு அருள்பாலிப்பதற்குத் தவறுவதேயில்லை. அதுவும் நம்முடைய சில பிரார்த்தனைகளுக்கு அன்னை பறந்து வந்துதான் அருள்பாலிக்கிறார்என்பது நமக்கே தெரியும், புரியும். கண்கள் திரள, முகம் சிவக்க, மெய்சோர நன்றி கூறுகிறோம், அவ்வளவே. அத்துடன் நம்முடைய தொடர்பு அன்னையிடம் மிகமிக லேசானதாகத்தானேயிருக்கிறது. மீண்டும் அதுபோல் ஒரு சந்தர்ப்பம் வந்தாலொழிய நம் பக்தியின் தீவிரமும், வணங்குதலும் மேலோட்டமாகத்தானேயிருக்கிறது.

குடும்பச் சூழல், குழந்தை குட்டிகளின் கலாட்டா, வேலைக்காரிகளின் தொந்திரவு, ஆபீஸில் நிம்மதியின்மை, பஸ்ஸில் ஏறி வரும் அயர்வு, வீட்டில் நுழையும்போதே புடவையை அள்ளிச் செருகியபடி மாலை வேலையையும், இரவுக்கான ஏற்பாடுகளையும்



செய்ய வேண்டிய சூழ்நிலை.... நிச்சயம் இந்தக் காலகட்டத்தின், அவசர யுகத்தின் பாதிப்புகள்தான். ஆனால் அதைச் சுமக்க வேண்டிய கட்டாயம் எல்லோருக்கும் இருக்கிறது. சுமக்கலாமே எதையும், அன்னையை மனதில் இருத்திக் கொண்டு. ஓர் ஐந்து வினாடிகள் போதும்.... உண்மையான நம் பிரார்த்தனையை உளமாறச் சொல்லி, வேண்டி... ''நீயே என்னுள்ளிருந்து எல்லாம் செய்யம்மா'' என்ற ஒரு வேண்டுகோளை நாம் மூச்சை வெளியே விட்டு, மறுபடி உள்ளிழுக்கும் முன்பே, **ஆழ்ந்த பக்தியோடு** சொன்னாலே போதுமே. அடுத்த வினாடி உங்களுக்குள் ஒரு சக்தி, நிச்சயமாக.... புகுந்து, உங்கள் வேலைகளை சுலபமாக்கி, லேசாக ஆக்கும்என்பது பொய்யேயன்று. உணர்ந்து பார்த்தால் புரியும். மளமளவென்று சந்தோஷம் பொங்கும். ஆனால், அந்த பக்தியும், வேண்டுகோளும் உள்ளார்ந்து வரவேண்டும்என்பதே முக்கியம்.

இத்தனை நேரம் முதல் குழந்தையான முரளி எப்படித் தூங்கினான்? ஏன் எழவேயில்லை? வீடு சிறியது. அடுத்த சின்ன அறையிலேயே அம்மாவின் பிரசவம் நடந்துள்ளது. டாக்டரில்லை, நர்ஸில்லை, தனி அறையில் கதவு சாத்தப்பட்டு நடக்கவில்லை. அம்மாவின் கடைசி நிமிஷக் கதறலோடு குழந்தையின், சின்னஞ்சிறிய குழந்தையின், அழுகையும் சேர்ந்த அந்த சப்தம் தூங்கும் குழந்தையை எழுப்பவில்லையே. இது நம் 'அன்னை'யின், நாம் உளமார வணங்கும் அன்னையின் சமயத்திற்குத் தகுந்த கருணையேயன்றி வேறு என்னவாக இருக்க முடியும்?

அது மட்டுமா? தள்ளாடி வரும் கணவனின் வருகையும் அன்று ஏனோ காணவில்லையே... எப்படி?

அவன் வந்திருந்தால்? மாமியால் நிச்சலனமாய், அன்னையின் மேலுள்ள தீவிரமான பக்தியோடும், முழுமையாக அன்னையையே மனதிலிறுத்திச் செய்திருக்க முடியுமா? அன்னை கொடுத்த தைர்யம்.... இது நிச்சயம்..... ஆமாம்.... அன்னையே அந்த மாமியினுள்ளிருந்து, எதெதை, எப்படிச் செய்யவேண்டுமென்பதை உணர்த்திக் கொண்டே இருந்ததினால்தான் தடைபடாமல், தன் வயதையும், சக்தியையும் மீறி மளமளவென, அடுத்தது, அடுத்ததுஎன குழந்தையை நன்கு

குளிப்பாட்டுமுன் தொப்புள் கொடியறுத்து, அங்கு ஒரு கட்டுப் போட்டு, நன்கு ஈரத்துணியால் துடைத்து, பிறகு ஐந்து நிமிடங்களுக்குள் குளிப்பாட்டி, வாயிலிருந்த கோழையை நீக்கி, முதுகில் தட்டி, அது வாய் திறந்து அழுததும்தான்.... அப்பாடா.... என்ற நிம்மதியுடன், ஓர் உலர்ந்த துணியை இரண்டு புறம் கொஞ்சமாகக் கிழித்து, அதில் குழந்தையின் கைகளை நுழைத்துப் பின்பக்கமாக முடிச்சு போட்டு படுக்க வைக்கும் வரை.... அவளை, அந்த மாமியை இயக்க வைத்தது யார்? எதுவுமே தெரியாத மாமிக்கு அந்த வல்லமை தந்தது யார்?

மளமளவென பார்வதியையும் சுத்தம் செய்து, உள்ளே ஓடி ஒரு புடவையைக் கொண்டு வந்து அவளுக்கு மேலோட்டமாய் சுற்றி, முகத்தைத் துடைத்து, சமையலறைக்கு ஓடி, இருந்த பாலைச் சுட வைத்து, சர்க்கரை கலந்து பார்வதியின் களைப்புப் போக அவளுக்குப் புகட்டியவள்... சட்டென நிமிர்ந்தாள்.

*தொடரும்......*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தவறான வாழ்வு வியாதியை உற்பத்தி செய்கிறது. அது புது மருந்துகளைத் தோற்கடிக்கும் தீராத வியாதியாகவும் இருக்கும். உடல் அவ்வியாதியை அழிக்க எழுந்தால், வியாதி மறையும். பரம்பரையான சர்க்கார் சட்டம், மாற்றுச் சட்டத்தால் போகும். “மனம் மாறினால் ஜடம் திருவுருமாற்றமடையும்” என்ற பகவான் வாக்குக்கு இவை உதாரணங்கள்.

***மனம் மாறினால் ஜடம் திருவுருமாற்றமடையும்.***

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: N. Asokan

# ஆன்மீகமும் ஐஸ்வர்யமும்

ஒருவர் வாழ்வில் முன்னேறி பெருஞ்சொத்து சம்பாதிக்கிறார். அவர் அந்தச் சொத்துமூலம் பெறுவது அனுபவம், அறிவு, நிதானம், அந்தஸ்து போன்ற பல. வேறு ஒருவரால் அதே அந்தஸ்தைப்பெற முடிந்தால் அவருக்கு அந்தச் சொத்துவரும் சந்தர்ப்பம் உண்டு. அது எளிதாக வரும். இதையே அனுபவம், அறிவு, நிதானம் ஆகியவற்றிற்குக் கூறலாம்.

✡ பெருஞ்சொத்து (உ.ம்.) 100 கோடி தரும் எந்த அம்சத்தையும் ஒருவர் எந்த வகையில் பெற்றாலும் அவருக்கு அந்தச் சொத்து வரும்.

✡ ஒருவர் அன்பரானால், அவர் பெரிய சொத்தை அடைய மற்றவர் போல் 20 ஆண்டு, 50 ஆண்டு உழைக்க வேண்டியதில்லை. அந்தச் சொத்து பெற்றபின் அவர் பெற்ற அம்சங்களில் ஒன்றைப் பெற்றால் அந்தச் சொத்து அவரைத் தேடி வரும்.

நாம் பார்க்கிறோம், ஊரில் ஒரு ரெட்டியார், ஒரு செட்டியார், ஒரு முதலியார் 50 ஆண்டு உழைத்து வெற்றிபெற்று, 100 கோடி அல்லது அதைப் போல பன்மடங்கு சொத்து பெற்றுவிட்டார். இவர் இச்சொத்து பெற்றபின் என்ன பெற்றிருக்கிறார், நிதானமா, அனுபவமா, அந்தஸ்தா, அறிவாஎன அறிவது முடியக்கூடியது. உதாரணமாக, இவர் பெற்றது நிதானம், பெரிய அளவில் நிதானம்எனக் கொள்வோம்.

***ஓர் அன்பர் அதே அளவு நிதானம் பெற்றால்,***
***அதே அளவு சொத்து அவரைத் தேடி வரும்.***

வாழ்வில் 50 ஆண்டில் பெறுவதை தவத்தால் 5 ஆண்டில் பெறலாம். தவத்தால் 50 ஆண்டில் பெறமுடியாததை சமர்ப்பணத்தால் 5 ஆண்டில் பெறலாம். 50 ஆண்டில் வாழ்க்கை அனுபவம் தரும் நிதானம், சமர்ப்பணத்தால் 5 மாதத்தில் வரும். அன்பர் பங்கு: (sincerity) உண்மை, சமர்ப்பணம்.

*ஓர் அன்பர் சமர்ப்பணத்தை உண்மையாக ஏற்றால் அவர் செய்யும் தொழிலில் 5 மாதத்தில் அதே நிதானத்தைப் பெறலாம். அதன்முறை என்ன?* **முடிவு, முயற்சி, பொறுமை.**

❀ ❀ ❀

*பின்பக்க அட்டையில் தொடரும்......*

*முன்பக்க அட்டையின் தொடர்ச்சி........*

# முடிவு, முயற்சி, பொறுமை

**முடிவு:**

நிதானம் தேவையென்பது முடிவு. இந்த முடிவை எடுக்கும்முன் மனம் நிதானம் தேவையில்லை, சொத்து வேண்டும்எனத் திட்டவட்டமாகக் கூறும். மனம் நம் கட்டுப்பாட்டிலிருக்காது. இது உண்மையான முடிவாக நெடுநாளாகும். அறிவில் தெளிவு ஏற்பட்டால் முடிவு இடம் கொடுக்கும். முடிவுஎன்றால் என்னஎன மனம் சிந்தித்தால், முடிவு நம்முடையதன்று, மூலவனின் முடிவே முடிவுஎன்பது தெரியும். அறிவு அதை ஏற்பது தெளிவு. அந்தத் தெளிவு முடியாத முடிவை முடிய வைக்கும்.

**முயற்சி:**

செய்யும் தொழில் வியாபாரம், ஆபீஸ் அதிகாரம், அரசியல் தலைமை, வக்கீல் தொழில், ஆசிரியர், டாக்டர், புரோக்கர்தொழிலாக இருந்தாலும், நிமிஷத்திற்கு நிமிஷம் 'நான் கூறுவதை ஊழியர் ஏற்க வேண்டும்', 'இலாபம் வரவேண்டுமல்லவா?', 'கேஸ் வெற்றி பெறவேண்டும்' என்ற அவசியம் உண்டு.

***அவசியம் காரியம் முடிவதில்லை.***
***சமர்ப்பணம் பூர்த்தியாக வேண்டும்.***

காரியம் முடிய வேண்டும்என்ற அவசியத்தை மாற்றி, சமர்ப்பணம் பூர்த்தியாக வேண்டும்என்றால், சமர்ப்பணம் எளிதில் பலிக்காது. சமர்ப்பணம் பலிக்காவிட்டாலும், காரியம் பூர்த்தியாகும். சமர்ப்பணத்தை மட்டும் மனம் நாடுவது முயற்சி.

**பொறுமை:**

சமர்ப்பணம் பலிக்க வேண்டும்என்று அவசரம் எழும். அவசரம் போய் பொறுமை வரவேண்டும். "அந்த நாளில் எனக்குப் பொறுமையில்லை" என பகவான் கூறும் நிகழ்ச்சியைக் கேட்டுக் கொள்ளவும் நமக்குப் பொறுமை இருக்காது. பொறுமை உள்ளே வளர்ந்தால் நல்லது. இல்லாவிட்டாலும் 'பொறுமை வேண்டும்' என்ற பிரார்த்தனை பலிக்கும்.

**பலன்:**

நிதானம் வேண்டும்என்றால் நிதானம் பலிக்கும். சொத்து அதனுள் அடக்கம். சொத்து வேண்டும்என்றால், நிச்சயம் பலிக்கும், நிதானம் வாராது. நிதானம் சொத்தைக் கொடுத்து, யோக வாயிலைத் திறக்கும்.

❀ ❀ ❀

June 2009 Jiviyam 15 Malar 2
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Price: Rs.5/- WPP No.45/09-11

புதிய வெளியீடுகள்

கர்மயோகியின்

| | |
|---|---|
| **பரம்பொருள் III** | ரூ.200/- |
| **எங்கள் குடும்பம் (பாகம் 2)** | ரூ.250/- |
| **உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்** | ரூ.100/- |
| **யோக வாழ்க்கை விளக்கம் IV** | ரூ.150/- |

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

| | |
|---|---|
| **லைப் டிவைன் விரிவுரைகள்**<br>*தமிழாக்கம்:* என். அசோகன் | ரூ.100/- |
| **SATYA JYOTHI**<br>**(CONCISE TRUISMS)**<br>**N.Asokan** | ரூ.200/- |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
**மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,**
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2214231

சென்னையில்
**மாம்பலம் தியான மையம்,**
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை - 600 035.
✆: (044)-24347191